கவிச்சித்தரின்

# வெடித்து முளைத்த விதைகள்



க.பொ.இளம்வழுதி

வெடித்து முளைத்த விதைகள்



## கவிசித்தரின்
## படைப்பு வரிசை

### கவிதைகள்

- ★ சிவப்பு நிலா — தமிழக அரசின் பரிசு பெற்ற காவியம்
- ★ குறுநூறு
- ★ சிவப்புச் சிந்தனை — தமிழக அரசின் பரிசு பெற்றது
- ★ வண்ணத்தமிழ்
- ★ வேர்கள் — புதுவை அரசின் பரிசு பெற்றது
- ★ நிறங்கள்
- ★ சில்லுகள்
- ★ வாக்குமூலம்
- ★ ஆண்டவன் அறுபது

### கட்டுரை

- ★ ஆரங்கள்

### வரலாறு

- ★ வெற்றியின் அறிமுகம்
- ★ இலக்கை நோக்கி
- ★ வைகறைப்புள் வாணிதாசன்
- ★ கார்கில் கதை

### பொது

- ★ தமிழைத் தேடி

**பரிதி பதிப்பகம்**
6. ஆ.லூ.தே.வணிக வளாகம்,
பாரதி வீதி, கடலூர் - 607 001.
☎ 04142-333221.

கவிச்சித்தரின்

# வெடித்து முளைத்த விதைகள்

க.பொ. இளம்வழுதி

பரிதி பதிப்பகம்
6. ஆ.லூ.தே.வணிக வளாகம்,
பாரதி வீதி, கடலூர்-607 001.
☎ 04142-333221.

- கவிச்சித்தரின் **வெடித்து முளைத்த விதைகள்**
- க.பொ. இளம்வழுதி
- தமிழ்க் கவிதைகள்
- முதற் பதிப்பு; செப்டம்பர் 2001.
- © ஆசிரியருக்கு
- 11.6.கி.கி. மேப்லித்தோ
- 12. புள்ளி. 12.5 x 18.5.செ.மீ கிரௌன்
- 110 + X = 120

# விலை : உரு 30.00

வெளியீடு. பரிதி பதிப்பகம்,
6. ஆ.லூா.தே. வணிக வளாகம்
பாரதி வீதி-கடலூா்-607001.
☎ 04142-333221.

திரையண் கணினியகம்,
6. ஆ.லூா.தே. வணிக வளாகம்
பாரதி வீதி-கடலூா்-607001.

அட்டை : பா. இராவணன், கடலூா்-1.

அச்சிட்டோர் : லாயல் பிரிண்டர்ஸ்,
சென்னை-5.

# நெஞ்சுள் நிலைத்த நினைவு



கவிச்செல்வம் கலையழகன்
(கு.பழநி. பனையபுரம்)

பிறந்த நாள்
07-09-1936

துறந்த நாள்
17-08-2000

தென்னார்க்காடு மாவட்டத்தில், சிறப்பாக நெய்வேலி
நகரியத்தில் கவிதைப் பயிர் வளர்த்தவர்.
தொழிற்சங்கம், இலக்கியம் ஆகிய துறைகளில் இவர் பதித்த
முத்திரை இறவா ஆவணம்.
சிந்தனை, செயல், எண்ணம் எழுத்து இவை
உச்சத்தில் வைத்து மெச்சத்தக்கவை.
இவருடைய இல்லறமே ஓர் இனிய காவியம்.
கவிதைத்துறை விளங்க உழைத்தார் - உதவினார் -
ஊக்குவித்தார் - உள்ளங்களில் உறைகின்றார்.
கவிஞர் மன்றத் தேரைக் கட்டி இழுத்த
சிறந்த செயலாளர். புதுமை பூத்த பூங்கா.
உடலை மண்ணுக்கும், புகழை விண்ணுக்கும்
இலக்காக்கிய இனிய தொண்டர்.
எம்நெஞ்சில் என்றும் இருப்போருள் இவரும் ஒருவர்

# எண்ணச் சுவடுகள்

மொழி முதலில் விழியில்தான் தோன்றியது. காலம் கடந்தே நாக்குச் சமவெளிக்கு நகர்ந்து வந்தது. உதடுகளை உறவாக்கிக் கொண்டு, சொற்கள் சூல் கொண்டன. ஐம்பலத் தேவைகளே, சொற்பிறப்பின் தூண்டுகோளாயின.

குமரிக் கண்டத்து மாந்தன்தான் சொற்சுவை நுகர்ந்து மகிழ்ந்தவன், நெகிழ்ந்தவன்.

விருப்பாலும், வியப்பாலும் அமிழ்தமிழ்தென்று அடுக்கிக் கூறி நிறுத்தியபோது, அவன் செவிகளில் தமிழ் என்னும் சொல் தனித்து ஒலித்தது. அன்றே அவனுடைய மொழிக்கு பெயர் கிடைத்து விட்டது.

இயல்பான உரையாடலில் எதுகையும் மோனையும், மணமக்களைப் போல் இணைந்து நடந்தன.

மொழியழகு கவிதையாயிற்று.

மொழியொழுங்கு இலக்கணமாயிற்று.

வாழ்க்கையின் பொருளை உணர்த்தும் புனைவுகள் இலக்கியமாயின.

இலக்கியமும், இலக்கணமும் மொழியின் விழிகளாயின. புலமைத்திறம் பூத்துக் குலுங்கிய காலத்தில், மொழிவளர்ச்சி முன்னோக்கி நடந்தது. இலக்கண இலக்கியங்கள், மதியும் கதிருமாக, மக்களால் ஏற்றுப் போற்றப் பட்டன.

தடை தகர்த்து நடைபயிலும் காட்டருவியாக, தமிழ் நடைபயின்றது.

புவியாண்டோர் புலவர்களைப் புரந்தனர்.

புலவர்கள் மொழியாக்க இலக்கியங்களைப் புனைந்தனர்.

மக்கள் இலக்கியங்களுக்கும், இயற்றியவர்களுக்கும் இதயத்தில் இருக்கை தந்தனர்.

தமிழின் தகுதி உயர்ந்து கொண்டே வந்தது. படைப்பிலக்கியப் படிப்பினையால் பயின்றோர் உள்ளம் பண்பட்டது; இலக்கியத்தின் பயன் தென்பட்டது. இவை, தமிழ் மொழியின் வளர்முக வரலாற்றுச் சுருக்கம். இதன் மறுபக்கத்தில்தான் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். மொழியின் வளர்ச்சியும், தளர்ச்சியும் இணைகோடுகளாக நம் முன்னே நீண்டு கிடக்கின்றன.

இலக்கிய படைப்பாக்க எண்ணிக்கை பெருகிக் கொண்டிருந்தாலும், உலகத் தரத்தை எட்டவில்லையோ என்று எண்ணவேண்டியுள்ளது. நூறு கோடி மக்களைக் கொண்ட இந்தியா 1913 -க்குப் பின் , நாளிதுவரை நோபல் பரிசுப் பக்கம் செல்ல முடியவில்லை, ஏன்? சிந்திக்க வேண்டிய நேரம் இது. இதற்கு வேண்டிய பொறுமையும், பொறுப்புணர்வும் நம்மிடம் இல்லாமற் போகக் காரணமில்லை.

சிலைகளுக்கு ஒப்பனை செய்வதிலேயே நம் நேரம் செலவாகிக் கொண்டிருக்கிறது.

தவிக்கும் நெஞ்சுக்குத் தண்ணீர்தர நமக்கு நேரமுமில்லை, நெஞ்சில் ஈரமும் இல்லை.

தன்னலத் தாக்கத்தால் நமது மனப்பரப்பு எவ்வளவு சுருங்கிக் கிடக்கிறது!

கவிதை வரிகளை எடுத்தாள்வதில் பாவேந்தரைக் கடந்து வரவே நமக்கு இன்னுமொரு நூற்றாண்டு தேவைப்படும் போலிருக்கிறதே!

எல்லை விரிவடையாத போது, இலக்கியம் வளர்வதாக எப்படி எண்ண முடியும்?

பத்துபேர் படைப்பதைப் பன்னூறு பேர் படித்தால் அது வளர்ச்சியின் அடையாளம்! பன்னூறு பேர் படைத்துப் பத்துபேர் படித்தால் . . . ?

தேடலுக்கு இது ஊடல் காலம் போலும்! அக்கம் பக்கம் பார்க்காமல்; அலைகள் மீதல்லவா நம்பார்வை பதிந்து கிடக்கிறது!

உலகம் தன்னைத்தானே சுற்றிக் கொள்வதோடு நிறுத்திக் கொண்டிருந்தால், விளைவு என்னவாக இருக்கும்? இந்நாள் இலக்கிய உலகம், தன்னைத் தானே சுற்றிக் கொண்டிருப்பதாகத்தான் தோன்றுகிறது!

விளம்பர வெளிச்சம் நிலைவிளக்காக இல்லாமல், சுழல் விளக்காக இருந்திருக்குமானால் எத்தனையோ ஆற்றலாளர்களை நாம் அடையாளம் கண்டிருக்க முடியும்.

சிற்றூர் படைப்பாளிகள் முற்றாக புறக்கணிக்கப்படுவதால், காகிதப்பூக்களே அதிகம் கடைவீதிக்கு வருகின்றன.

நமது செயல் மட்டுமன்றி, சிந்தனையும் சிறகொடிந்து கிடக்கிறது. வளரத் துடிக்கும் வானம்பாடிகள், வாய்ப்பில்லாமல் கூண்டுக்குள்ளேயே குரல் வறண்டு கிடக்கின்றன. சிறகுகள் ஒடிக்கப்பட்டிருந்தாலும் பெயரென்னவோ வானம்பாடி தான். ஆறுதலளிப்பதும் அதுதான்.

தொலைந்து போன புதுமையையும்; புரட்சியையும் தேடும்பணி திண்ணையைத் தாண்டித் தெருவுக்கு வரவில்லை! வீதி பக்கம் நம் விழி திரும்ப வேண்டிய நாள் அண்மையிலா? சேய்மையிலா?

பலர் பறிமாறும் சொற்கள், உள்ளத்திலல்லாமல் உதட்டிலேயே சமைக்கப்படுகின்றன. இதுதான் நமது "அந்தரங்க சுத்தியின் அடையாளம்"!

கூன் விழுந்து நடக்கும் நேர்மையை நிமிர்த்தப் போவது யார்? எப்போது?

அரசியலுக்காவது ஒரு அண்ணல் கிடைத்தார், இலக்கியத்திற்கு? அடையாளம் காணத்தான் ஆசை!

தங்கவயல் லோகிதாசன் அங்கலாய்த்துக் கொண்டதுபோல், பரிசும் பாராட்டும் புதிய முகவரிக்குப் போய்ச் சேரவில்லை என்பதை மறுக்கவும் முடியவில்லை; மறைக்கவும் இயலவில்லை. இதில் விதிவிலக்கும் இல்லாமற் போய் விடவில்லை.

சம்பந்திகளோடு அமர்ந்து சாப்பிடுவதற்கு ஏன் சமபந்தி என்று பெயர்ச் சூட்ட வேண்டும்?

இலக்கியத்தில் இருண்ட காலம் இதற்கு முன்னரும் இருந்திருக்கிறது. வெளிச்சம் விரவ ஏந்துகள் ஏராளமாக இருந்தாலும், விளக்கேற்றும் விரல்கள் மட்டுமே முடங்கிக் கிடக்கின்றன. தகுதி பெற்றவர்கள் தடுக்கி விழாதிருக்கத் தன்னம்பிக்கை விளக்கைத் தங்களுடன் வைத்திருக்கத் தவறக்கூடாது.

இருட்டில் வேங்கைவிழி பார்வைப் படலம் விரிவடைவதைப் போன்று, ஏற்பில்லா நிலையிலும் படைப்பாளி தன்னம்பிக்கை இழக்காமல் தகுதியை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

எவர் தோளையும் பற்றாமலேயே எழுந்து நடக்க முயன்றிட வேண்டும். 'நாளை'யில் நம் பங்கும் இருக்க வேண்டும்.

படைப்பாளிக்கும், படிப்பாளிக்கும் இடையில் இன்னொருவர் நுழைய அனுமதிப்பதைத் தவிர்க்க வேண்டும்.

காற்றை அடையாளம் காட்ட முடிந்தவர்கள் மட்டுமே கவிதையையும் அடையாளம் காட்ட முடியும்.

காற்று-கவிதை-காதல் இம்மூன்றும் ஒத்தத் தன்மையுடையன.

சொற்சுருக்கமும், சுவையும் கவிதையின் சிறப்பு. பொன்னணியில் மணிகளை பொருத்துவதைப் போன்று கவிதைகளில் சொல்லமைப் பிருக்க வேண்டும். ஒரு கவிஞனின் வெற்றி அதில்தான் அடங்கியிருக்கிறது.

ஐந்தாண்டு இடைவெளிக்குப் பின், என் கவிதைகள் நூல் வடிவம் பெற்றுள்ளன.

அவலங்களையும், அடாவடித்தனங்களையும் கண்டு கேட்டு கொதித்தபோது வெடித்து விழுந்த சொல்லடுக்குகள்தாம் கவிதையாக உருக்கொண்டுள்ளன. இடையிடையே இதமான நீரூற்றுக்களையும் சந்திக்கலாம்.

"ஒரு வாள் வீரனுக்கே வாளைக் கொடு. கவிஞனல்லாத ஒரு மனிதனுக்கு உன் கவிதையை வழங்காதே" என்று சப்பானிய சென்-உரை ஒன்றுண்டு.

தமிழில் எழுத படிக்கத் தெரிந்தவர்களில் ஐம்பது விழுக்காட்டினர் கவிஞர்கள்தாம். எனவே, இந்த நூல் கவிஞர்களின் கைகளில்தான் இருக்கும் என்பது என் அசைக்க முடியாத நம்பிக்கை.

"கண்ணியமில்லாத வெற்றியைவிட, நாணத் தக்க தோல்வியே உயர்ந்தது, உன்னதமானது" என்றார் கலீல் ஜிப்ரான். என் நம்பிக்கை தோற்றாலும் பெருமிதந்தான், மரபு மறையாது என்பதற்கு வெடித்து முளைத்த விதைகள் ஒரு விளக்கம்.

எண்ணத்தாலும், இயக்கத்தாலும் என்றும் இளைஞர்களாக இருப்பவர்களுக்கு கவிதை நல்ல துணை.

அச்சேறும் முன் கவிதைகளைப் படித்து கருத்துரைத்த வழக்கறிஞர், கவிஞர் கோ. மன்றவாணன் அவர்கட்கும், பிழை பார்த்துதவிய செந்தமிழ்ச் சோலை இலக்கிய அமைப்பின் தலைவர் புலவர் இரா. அரங்கநாதன் அவர்கட்கும், எதைச் செய்தாலும் செப்பமாகச் செய்ய வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கும் தமிழன்பர் புலவர் பொறி.சி. செந்தமிழ்ச்சேய் அவர்கள், ஆழ்ந்து படித்துத் திருத்தம் செய்து உதவியுள்ளார்கள் அவருக்கும் நமது நெஞ்சார்ந்த நன்றி.

என் பெயரிலமைந்த அறக்கட்டளைத் தலைவர் மு. தனராஜ், உறுப்பினர்கள் திரு ந. கார்மேகவண்ணன், அரங்க. இரகு ஆகியோருக்கும் லாயல் பிரிண்டர்ஸ் குமரேசன் அவர்கட்கும், நூலுருவாக்கத்திற்குழைத்த நல்ல நண்பர்களுக்கெல்லாம் நன்றி.

**க.பொ. இளம்வழுதி**

*38, முத்துச் சாலை,*
*அண்ணா நகர்,*
*கடலூர்-607 001.*

# பதிப்புரை

கவிச்சித்தரின் **வெடித்து முளைத்த விதைகள்** எமது பதிப்பகத்தின் இரண்டாவது நூலாக வெளிவருகிறது. முளைத்த விதைகள் செழித்து வளர தமிழ் மண் துணை செய்ய வேண்டும்.

மரபுக் கவிதைகள் மறைந்துவிடும் என்று அச்சுறுத்தியவர்களும் உண்டு, எச்சரித்தவர்களும் உண்டு. மரபுகள் மாற்றத்திற்கு உட்பட்டே வாழ்ந்து கொண்டிருக்கின்றன. மாற்ற முயன்றவர்கள் வென்றதுண்டு, மாண்டு போகச் செய்ய எத்தனித்தவர்கள்தாம் ஏமாற்றமடைந்தனர்.

இறக்கு '**மதி**'க்கே வாய்ப்பென்னும் சூழலில் மரபை ஏற்றும் '**மதி**'யை நம்பி இந்நூலை வெளியிடுகிறோம்.

கவிச்சித்தரின் படைப்புகள் நேர்மையான நெஞ்சங்களால் வாழ்த்தி வரவேற்கப்பட்டவை. இந்நூலும் அவ்வாறே வரவேற்கப்படும் என்று எதிர்பார்க்கின்றோம்.

- பரிதி பதிப்பகத்தார் -
கடலூர்-1.

நீதி

# ஆசைப்படு

ஆசை அரும்பிட வேண்டும் - அது
ஆக்கம் விளைத்திடத் தூண்டும்!
ஆசைக் களவிட வேண்டும் - அதை
ஆளுந் திறத்தினில் யாண்டும்!

ஆசையை வெல்வத னாலே - நலன்
அடைபவ ரார்புவி மேலே?
மாசைக் கொல்வத னாலே - மனம்
மலரும் மானுடத் தாலே!

துறவியர் நெஞ்சுக் குள்ளும் - பரன்
துணைமீ தாசை துள்ளும்,
பிறவியை வெறுத்ததை எள்ளும் - எவர்
பிறப்பறுத் தாரதைச் சொல்லும்?

மூன்றிலும் ஆசைவை முத்தாய் - அவை
முளைத்திட ஊன்றுளே வித்தாய்!
தோன்றும் நலத்தினைக் கொத்தாய் - நீயே
துய்க்க அலையாதே பித்தாய்!

நேர்வழி தேர்ந்ததில் செல்லு - பகை
நெஞ்சுள் புகவரின் தள்ளு!
நீர்வழி ஆக்குநின் நெஞ்சை - உழை
நிலைபலன் நல்குமுன் விஞ்சை!

பேராசை கோததைத் தூக்கு - கொஞ்சம்
பொருளாசை தேவைதான் தேக்கு!
போராசை தீததை நீக்கு - நல்ல
புகழாசை உவப்பதை ஊக்கு!

*கோததை = கோது + அதை*

# என் கேள்விக்கு என்ன பதில்?

செருப்பின்றிச் சென்னையிலே
சித்திரையில் நடப்பவரைச்
சிறுபொறிதான் தகித்துவிடுமா?
பருப்பில்லா உணவுக்கே
பகலிரவாய் உழைப்போர்க்கே
பால்பழத்தின் சுவைதெரியுமா?

உதிர்கின்ற பருவத்தில்
உயர்ந்துள்ள தருவேனும்
உண்ணவொரு கனிஈயுமோ?
எதிர்காலம் தனையெண்ணி
இயற்றாத வினையாலே
இறவாத புகழ்மேவுமோ?

கதிர்வந்து சாயாமல்
கட்டுகளம் காணாமல்
களஞ்சியத்தின் சுமைகூடுமா?
எதிர்கொண்டே அழைத்தேகார்
இல்லத்தில் உணவுண்டால்
இளைக்காது மனம் வீங்குமா?

பொறுப்போடு கற்காமல்
பொழுதோட்டும் மாணவரைப்
பொற்காலம் தேடிவருமா?
வெறுப்போடு வினைசெய்தால்
விழலாகிச் சாயாமல்
விளைவெல்லாம் கூடிவருமா?

எந்தவினை என்றாலும்
சொந்தஉழைப் பில்லாமல்
முந்திபலன் தந்துவிடுமா?
புந்திநலன் பேணாமல்
பொறுப்பூக்கம் ஓங்காமல்
புத்தாக்கம் தேடிவருமா?

பெற்றோரைப் பேணாமல்
பெரியார்சொல் கேளாமல்
பெரும்புகழும் கிட்டிவிடுமா?
முற்றாத கலையாலே
முழங்காலும் உயராது
முனைப்பின்றி வெற்றிவருமா?

# கேள்வி நேரம்

இருக்கும் போதே இறப்பைப் பற்றி
எண்ணிப் பார்த்தோமா?
நெருக்கும் தேவை நிலைக்கா தென்றே
நினைத்துப் பார்த்தோமா? - நெஞ்சை
நனைத்துப் பார்த்தோமா?

பரிக்கும் போது வலிக்கு மென்றே
பதறி அழுதோமா?
எரிக்கும் போது எதுவும் வாரா
இயல்பும் பழுதாமா? - மாந்த
இயக்கம் முழுதாமா?

பசியே உலகின் பொதுமை என்ற
பாடம் கற்றோமா?
புசியா வயிற்றின் புண்ணை ஆற்றும்
பொறுப்பை ஏற்றோமா? - நீதிப்
போதம் மாற்றாமா? *(மாற்று+ஆமா=மாற்றாமா)*

தன்னல விருப்பைத் தவிர்த்தே நெஞ்சில்
தண்ணளி வளர்த்தோமா?
பன்னலம் புரந்திடப் பதுக்கிய சொத்தைப்
பகிர்ந்தே கொடுத்தோமா? - பொல்லாப்
பகையைக் கெடுத்தோமா?

கல்வி வணிகம் கறையா மென்றே
கையைத் துடைத்தோமா?
அல்வழி வரவால் அமைதி கெடுமெனும்
அறவுரை நினைத்தோமா? - நெஞ்சை
அருளில் நனைத்தோமா?

துன்பம் மனத்தைத் துளைக்கும் வலியைத்
துய்த்துப் பார்த்தோமா?
அன்பைச் சுரந்து, அழுவோர் வாழ்வின்
அல்லல் தீர்த்தோமா? - அருளை
அகத்தில் வார்த்தோமா?

# மனக்கோணம்

பொழுதைப் பொன்னாக எண்ணு! - அது
போனால் திரும்பாது கண்ணு! ...

(பொழுதை)

அழுது புலம்பினும் ஆக்கம் வாராது - சொல்
ஆறுத லல்லது செல்வம் தாராது!
பழுது வரும்வழி பார்த்துச் செல்லாதே - பின்
பரிவை எதிர்பார்த்துக் குறையைச் சொல்லாதே!

(பொழுதை)

எண்ண மிருந்தால் இருக்குது வேலை - உனை
இயக்கும் மதியே புதுத்தொழிற் சாலை!
கண்ணும் கருத்தும் கலந்திடும் வேளை - கவின்
கரத்தில் மலர்ந்திடும் கலையெழிற் சோலை!

(பொழுதை)

படிப்படி யாகவே பலனெலாம் கூடும் - மனம்
பரிந்துன தாசையைக் கிளறிடத் தேடும்!
அடிக்கடித் தொழிலை மாற்றிடில் கேடும் - உனை
அடைந்திட ஆர்வுடன் ஆளொடு தேடும்!

(பொழுதை)

# உன் சக்தி

என்னடா வளர்ந்தசெங் காளை-நீ
வெறுமனே கழிக்கிறாய் நாளை!
குன்றென உயர்த்தடா தோளை-செய்
குறைந்திடு மிடரந்த வேளை!

சுழற்றடா பார்வையை எங்கும்-ஒரு
சூக்குமம் மூளையில் தங்கும்!
உழற்றுமி டிமைக்குப் பங்கம்-உழை
உருப்பெறும் உன்னிடம் சங்கம்!

இருபது அகவையைத் தாண்டி-நீ
இருப்பதோ உதவியை வேண்டி?
ஒருதலை முயற்சியைத் தூண்டி-உடன்
உழைத்திடு இலையெனில் ஆண்டி!

உறுதியை உன்னுளே தேக்கு-வினை
ஊக்கினால் மலையுமோர் பாக்கு!
அறுதியென் றாள்வினைக் கில்லை-உன்
அக்கறை தானதன் எல்லை!

மின்னிழைக் குள்ளுள சக்தி-உன்
மேனியுள் உண்டதை நத்தி!
பொன்னிழை யாக்கிடு வாழ்வை-உயிர்
போம்முனே நீக்கிடு தாழ்வை!

# உள்ளமே உன்னைத்தான்

முடியும் முடியும் முனைந்தால் முடியும்;
ஒடியும் ஒடியும் மடிமை ஒடியும்;
படியும் படியும் பலவும் படியும்;
விடியும் விடியும் வாழ்வும் விடியும்!

கழிக்கக் கழிக்கத் துளிர்க்கும் செடிகள்;
மழிக்க மழிக்க வளரும் முடிகள்;
பழிக்கப் பழிக்கப் படரும் பகைகள்;
செழிக்கச் செழிக்க அவிழும் முகைகள்!

காக்க காக்க கடமை காக்க;
போக்க போக்க மடமை போக்க;
ஊக்க ஊக்க உரிமை ஊக்க;
தேக்கத் தேக்க பெருமை தேக்க!

பார்க்க பார்க்க பசுமை பார்க்க;
தீர்க்க தீர்க்க பிணியைத் தீர்க்க;
கோர்க்க கோர்க்க உறவைக் கோர்க்க;
சேர்க்க சேர்க்க செழுமை சேர்க்க!

செய்யச் செய்யச் செழுமை கூடும்;
பெய்யப் பெய்ய வறுமை ஓடும்;
தொய்யத் தொய்யத் தனிமை வாடும்;
உய்ய உய்ய ஒருமை நாடும்!



# தேய்பிறை

விழல்தனை அறுத்து வந்தா
விருந்திட நாள்கு றிப்பார்?
அழல்தனை அணைத்து விட்டா
அடுப்பிலே உலையை வைப்பார்?
நிழல்தரு கிளையொ டித்தா
நின்றிடப் பந்தல் வேய்வார்?
பழமிலா மரத்தி லேறிப்
பயனிலா துலுக்கு வாரோ?

அலைதனைக் காலால் எந்த
அகப்படும் முத்தும் உண்டோ?
சிலையிலா அம்பெ டுத்துச்
செருமுகம் செல்வா ருண்டோ?
விலையிலாக் கல்விக் கீடாய்
விளைநலன் வேறொன் றுண்டோ?
நிலையிலா வாழ்வில் நேர்மை
நீங்கிடின் புகழிங் கேது?

விரைதரு சந்த னத்தை
வேலியாய்ப் பயன்ப டுத்தின்
புரையிவர் மதியி லென்று
புகல்வரே குமுகா யத்தார்!
மரைவிழி மகளிர் தம்மின்
மாண்பினைப் பேணா ரெல்லாம்
திரையிலா அரங்கம் போல்வார்
தேய்பிறை அவரே கண்டீர்!

# இங்கே

வந்தோம் போனோம் வாழ்வே இங்கே
வரலா றாகிறது - பலரின்
நிரலாய்ப் போகிறது!
நொந்தோம் கெட்டோம் நொடிந்தோ மென்பதே
நுவல்வ தாகிறது - நெஞ்சம்
கவல்வ தாகிறது!

பிறந்தோம் பெற்றோம் பேச்சே பலரின்
பெருமை யாகிறது - வாழ்வின்
அருமை யாகிறது!
மறந்தோம் மாண்டோம் மட்டும் பலரின்
மரபாய்ப் போகிறது - எண்ணம்
இரவாய் ஆகிறது!

காட்டு நீட்டு சொல்லே ஆள்வோர்
கட்டளை யாகிறது - நேர்மை
பொட்டலாய்ப் போகிறது!
பூட்டு ஓட்டு ஆணை ஒன்றே
போதனை யாகிறது - ஆள்வோர்
சாதனை யாகிறது!

சொத்து சுற்றம் மட்டும் இங்கே
சொந்தம் ஆகிறது - தலைவர்
பந்தம் ஆகிறது!
எத்து ஏய்ப்பு என்பதே இங்கே
எல்லா மாகிறது - வாழ்க்கைப்
புல்லாய்ப் போகிறது!

தொண்டு தூய்மை தூக்கிக் காட்டத்
தோல்வி யாகிறது - பண்பே
வேள்வி யாகிறது
அண்டும் நன்மை ஆள்வோர் பக்கம்
அடக்க மாகிறது - தொண்டு
முடக்க மாகிறது!

ஏய்ப்போம் தீய்ப்போம் என்பார் கூட்டே
இயக்க மாகிறது - பதவி
முயக்க மாகிறது!
வாய்ப்பு வசதி வாழ்க்கை என்பதே
வளப்பம் ஆகிறது - உண்மை
இளப்பம் ஆகிறது!

-----

# ஏமாற்றம்

முன்னோர்கள் கண்டொறுத்த
மூன்றுமுத லாசைக்கும்
முன்னிற்கும் நிலையாசையால்
அன்றாட வாழ்க்கையிலே
அகவொழுக்கம் புறவொழுக்கம்
அணையுடைந்த நீராச்சுதே!

அடிமையென அடங்கிடவும்
மிடிமைவினைப் புரிந்திடவும்
அணியமெனக் கைத்தூக்கினால்
கொடிநிழலில் ஒதுங்கிடவும்
அடிமடிதான் கனத்திடவும்
அதிகாரப் பதவிவருமே!

அறிவுடைமை பொதுவுடைமை
அறவாழ்க்கை என்பதெலாம்
அரசியலில் படியேறுமா?
நெறிதவறி வரும்பொருளை
நிதியென்று கொடுத்துவிடில்
நீட்டாண்மை முடிசூடுமே!

இடைக்கால மாந்தர்கட்
கில்லாத பொன்னுலகில்
இருந்திட்ட வேட்கைபோன்றே
வடைக்கேங்கும் நரியாக
வாழ்கின்ற பேர்வழிக்கு
வருமானம் பதவியாச்சே!

எதுவெதையோ ஏணியென
எதிர்பார்ப்பில் தோள்சுமந்தே
எலும்பிளைத்த தொண்டனுக்கோ
புதையலெனப் பதவிபெற்றுப்
புதுவாழ்வு கண்டவரைப்
போற்றுவதே கடமையாச்சே!

வாக்களித்த ஒருகடமை
வாழ்வளித்த பெருங்கொடுமை
வரலாறே மக்களாட்சி!
போக்கிலிகை யோங்கிவரப்
பொறுமையுளம் வீங்கிவரப்
புரட்சிவிதை தேடலாச்சே!

ஒழுக்கத்தைத் தீண்டாத
உயர்கல்வி கற்பித்தே
உள்ளத்தைப் பாழாக்கினார்!
இழுக்குற்ற குமுகாயம்
இடர்பட்டுத் தடுமாற
இளிவரகு கூழாக்கினார்!

தன்னலத்தை வென்றழித்த
தலைவனுக்கே துணையாகும்
தகுதிக்கு வழிகாட்டுவோம்
மன்னுதமிழ் மறைபோற்றி
மானுடத்தைக் கரையேற்றி
மருட்டவரும் பழியோட்டுவோம்!

# அந்திம சிந்தனை

எத்தனை உறவு எத்தனை நட்பு
ஏந்திப் புரந்தன அன்று
நத்தி வியந்தவர் நன்மை பயந்தவர்
நழுவினர் மொத்தமாய் இன்று.

உதிர்வதும் துளிர்ப்பதும் உறவிலும் உண்டெனும்
உலகியல் உணர்ந்திடும் போது
விதிர்ப்பதும் பழிப்பதும் விலகிடும் நம்முளம்
விழிப்பது தெரியுமப் போது!

கொண்டுநாம் வந்தது கூடவே வாழ்வது
கோலம் கரந்தது சாவு!
பண்டிவண் வாழ்ந்தவர் பட்டறிந் தோதினர்
நாரதன் தூதுதான் நோவு.

ஆக்கம் வளர்த்திடும் ஆற்றலே வீழ்ந்தபின்
ஆவி இருந்தென ஆற்றும்?
ஏக்கம் இடர்வினை இன்பிலா பொய்த்துணை
ஏனாம் நமக்கென சாற்றும்!

பாடுள மட்டுமே பாரினில் வாழலாம்
பாங்கதில் மேவுதல் கூடும்.
கூடுளே நோய்நொடி குந்தியே ஆண்டிடின்
கோலம் குலைந்துயிர் ஓடும்!

# அன்னையும் ஆசானும்

எடுப்பு

அன்னையும் ஆசானும் ஒன்று
அவரடி தொழுவது நன்று ... அன்னையும் ...

தொடுப்பு

மன்னும் புகழ்க்கவர் வித்து
மறவா தவருரை நத்து! ... அன்னையும் ...

முடிப்பு

தன்னை மறந்தவர்
உன்னை நினைந்தவர்
பின்னை விளைவதன் மூலம் - அவர்
பெற்றி நினைப்பதே சீலம்! ... அன்னையும் ...

கெட்டுத் திரிந்திடில்
திட்டித் திருத்துவார்
எட்டி எனநினைத் தாலும் - அவர்
விட்டுக் கொடாரொரு நாளும். ... அன்னையும் ...

வெற்றி உனக்கெனில்
பற்றுக் களிப்புடன்
சுற்றம் விளித்துனைப் போந்நுவார் - கலை
கற்றவர் மேடையில் ஏற்றுவார். ... அன்னையும் ...

அன்பில் திளைத்தவர்
ஆற்றல் விளைத்தவர்
துன்பிலும் உன்நலன் பார்ப்பார் - தம்
தொண்டினால் மேன்மைகள் சேர்ப்பார். ... அன்னையும் ..

சான்றோர்

# சான்றோர் வாழ்க

படைபெருத்த தென்றாலும் தலைவ னின்றேல்
பயன்குறைந்து குழப்பந்தான் எஞ்சும்; நல்ல
கடைவிரித்தும் என்னபயன்? கொள்வா ரின்றேல்
கைப்பொருளும் காலமுந்தாம் விரயம், நோஞ்சான்
தொடைதட்டின் நகைப்பாகும், தோளும் வாளும்
துடிப்புமிலை என்றானால் மானம் போகும்!
இடைபெருத்த பெண்ணாட வந்தா ளானால்
என்னாகும்? அரங்கத்தில் எள்ளல் எஞ்சும்!

தண்டமிழின் படைக்கலனாய் மிளிர்ந்த எம்மின்
தமிழ்க்கோமான் பாவேந்தன் இலையென் றாகச்
சிண்டவிழ்ந்த சில்லறையின் ஓசைக் குள்ளே
செந்தமிழின் குயிலோசை ஒடுங்க லாச்சே!
பண்டமிலாப் பானையெலாம் பரிசு பெற்றுப்
பவனிவந்து நிறைகுடத்தை ஒதுக்க லாச்சே!
கண்டுதமிழ்க் கைவரிசைக் காட்டு தற்கே
கனகசுப்பு ரத்தினத்தின் வீரம் வேண்டும்!

மாற்றார்க்கும் போற்றார்க்கும் மட்டு மன்றி
மனமறிந்து நலமழிப்பார் தமக்குங் கூட
ஊற்றாகி உயிரூட்டும் தமிழே! எங்கள்
உணர்வுக்குள் உயிரணுவாய் ஆனாய் நீயே!
காற்றாகக் கதிராகக் காரு மாகக்
கற்றார்க்கிங் கானவளே! கவிவேந் தன்றன்
நாற்றான நல்லோரின் வலிமை கண்டு
நனிமகிழ்ந்து வணங்குகின்றேன் வாழ்க சான்றோர்!



# கிழவர் இருவர்

நந்தமிழர் மரபைப்போல் நாநி லத்தில்
நாகரிகம் வேர்விட்ட கிரேக்க நாட்டில்
சிந்தனைக்கு விருந்துவைத்தே சீர்தி ருத்தச்
செம்மலென விளங்கிட்ட சாக்ர டீசோ
கந்தகம்போல் தகிக்கின்ற கதிர்க்கண் நோக்கும்
கடுவெ(ய்)யிலில் கையிலொரு விளக்கை ஏந்தி
விந்தையுடன் வீதியெலாம் தேடிப் பார்க்க
விளங்காதோர் ஏளனமாய்ச் சிரித்துச் சென்றார்!

வினையின்றி விளைவில்லை, வெய்யி லின்றேல்
விதவிதமாய்ப் பூக்களுக்கே வண்ண மில்லை!
சினையின்றிப் பிறப்பில்லை, சிந்திக் காமல்
சீர்திருத்தம், விஞ்ஞான வெளிச்ச மில்லை!
மனையின்றிச் சுற்றமிலை, மாந்த வாழ்வில்
மலர்ந்துள்ள எவ்வினைக்கும் வேரி ருக்கும்
புனைவில்லாச் சொல்லாளன் சாக்ர டீசின்
புதிருக்குள் பொருள்பதுங்கிக் கொண்டி ருக்கும்!

மாந்தனொரு விலங்கென்றான் அறிஞன், அந்த
மாக்களிடம் மண்டிவிட்ட அறியா மையை
ஏந்தாக்கிக் கொண்டசிலர் கொழுப்ப டக்க
ஏந்திட்டார் சுடரன்றே ஏதன்ஸ் தன்னில்!
மாந்திட்ட மதக்கள்ளின் மயக்கத் தாலே
மாமேதை தமைக்கிறுக்காய் எண்ணி னார்கள்
பூந்தாதில் தேனெடுத்த தும்பி தன்னைப்
புழுவென்றார் அறியாமைக் கடிமை யானோர்!

பகுத்தறிவுப் பகலவனாம் பெரியார் போலே
பன்னூறு ஆண்டிற்கும் முன்னர் தோன்றிப்
புகுத்திட்ட மடமையிருள் போக்கு தற்கே
பொதுவிடத்தில் அறிவுவிளக் கேற்றிட் டாரை
நகுதற்கே இலக்காக்கி, நயன்மை கெட்டோர்
நஞ்சூட்டிக் கொன்றார்கள், இறந்தா போனார்?
உகுக்கின்ற கண்ணீரின் உப்பைப் போலே
உலகத்தில் பகுத்தறிவாய் உலவு கின்றார்!

ஏனெதற்கு என்றவினா தொடுப்பா ருக்கே
எப்போதும் பஞ்சந்தான், இல்லை யென்றால்
வானெழுந்த பனிமலையைச் சிவனா ருக்கே
வாழிடமாய் நம்புவரோ மக்கள்? எங்கும்
தானெழுதி வைத்ததனை நம்பச் செய்யத்
தாராள கற்பனையை விரித்தார், மக்கள்
ஏனெழுதி வைத்தாரென் றாய்ந்தி டாமல்
இறைபேரால் இருளுக்குள் குடியே றிட்டார்!

கீழ்க்கடலில் எழுகதிராய்க் கிளர்ந்து வந்த
கிழவர்நம் பெரியாரே சாக்ர டீசை
வீழ்த்திநகை புரிந்திட்ட விளங்கா மையை
வெற்றியுடன் எதிர்கொண்டார், தமிழ கத்தில்
ஆழ்த்திவிடும் நரகத்தில் இறைம றுப்பே
ஆகாபார் என்றச்ச மூட்டி னோரும்
வாழ்த்துகின்ற நிலைதுலக்கி வைத்தா ரந்த
விளக்கணைத்தே திரைக்காட்சி காண்கின் றோமே!



# பருந்தீயே!

பாரதியாம் பெருங்கோளில் முகிழ்த்து வந்த
 பருந்தீயே! பழமையெனும் முடவா தத்தின்
சூரணமே! சோர்ந்திருந்த தமிழர் கட்குச்
 சூடேற்றிப் பகுத்தறிவுப் பவனி வந்த
வாரணமே! வரிசையெனத் தமிழன் னைக்கு
 வைரமணிக் கவிபடைத்த புரட்சிப் பூவே!
ஈரமனம் பெற்றவனே! இந்நூற் றாண்டின்
 ஈடில்லாப் பெருங்கவியே! இமயம் நீயே!

நிமிராத பெண்களுக்கு நீதி கேட்டு
 நெருப்புவிழி திறந்தவனே! நீடு ழைத்தும்
உமியாகிக் கிடந்தவரின் உரிமைச் சங்கை
 ஊதியிமை திறந்தவனே! சமயக் கூட்டின்
திமிரோடு நடைபோட்ட மதத்தின் முன்னே
 தெளிவுத்தீ வைத்தவனே! சொற்கள் தந்த
தமிழாலே நீயுயர்ந்தாய், தமிழு முன்றன்
 தனித்திறத்தால் உயர்ந்ததெனில் தவறுண் டாமோ?

பெரியாரின் சீர்திருத்தப் படையெ டுப்பில்
பீரங்கி அணியன்றோ உன்றன் பாக்கள்!
எரியாத தீக்குச்சிப் புலவர்க் கெல்லாம்
இரவியென ஆனவன்நீ! குனிந்து நோக்கா
அரிமாநீ! ஆனாலும் அகந்தை தீண்டா
அறிஞன்நீ! ஆலயத்துள் புழங்கு கின்ற
புரியாத மொழிக்கும்மேல் தமிழே என்று
பொருள்வாதம் புரிந்திட்ட புலவன் நீயே!

முண்டாசுக் கவிஞனுக்குப் பெருமை சேர்த்த
முத்தான மாணவன்நீ! உன்தாக் கத்தால்
கண்டான கவிபடைக்கும் ஆற்ற லாளர்
கணக்கின்றித் தோன்றவழி செய்தாய் என்னே!
கொண்டாடும் நூற்றாண்டில் கொள்கை பற்றி
குவலயத்தில் வாழ்வதற்கே சூளேற் கின்றோம்!
அண்டாது பகையெம்மை, உன்பா கற்றோம்
ஆனந்தக் கூத்தாடி நினைவு கூர்வோம்!

*****

(பாரதிதாசன் பல்கலைக் கழகம் 1991-ஆம் ஆண்டு வெளியிட்ட பாவேந்தர் நூற்றாண்டு விழா மலரில் இடம் பெற்ற கவிதை)

# வாணிதாசனுக்கு நெஞ்சிலோர் கோட்டம்

நெஞ்சுக்கு நிறைவாக
நிலைமைக்கு இசைவாக
அஞ்சாமல் நீதந்தாய் பாட்டு-அட
அவையன்றோ பழமைக்கு வேட்டு!

கொடுத்தாலே பாராட்டிக்
கொள்கைக்கு எரியூட்டிப்
படுத்தார்போல் நீவாழ்ந்தா யில்லை-உனைப்
பாராட்ட முகையவிழும் முல்லை!

அகம்பாவம் கொள்ளாமல்
அயலார்பால் செல்லாமல்
புகழார நூல்தந்தீ ரய்யா-நீர்
போய்விட்டீ ரென்பதென்ன மெய்யா?

தமிழாலே பிழைக்காமல்
தவறொன்று மிழைக்காமல்
தமிழுக்கே உழைப்பெல்லாம் தந்தாய்-கவி
தரப்பெற்றுத் தழைத்தாளே நந்தாய்!

சின்னங்கள் உனக்கில்லை
சிலையொன்று மிங்கில்லை
என்னெஞ்சில் உனக்குண்டு கோட்டம்-விடு
இருக்கட்டும் நிலைத்துன்றன் பாட்டும்!

செல்வந்தான் சிலர்க்கில்லை
செய்நன்றி பலர்க்கில்லை
நல்லெண்ணம் வாழட்டும் பார்ப்போம்-உன்
நற்றொண்டை நிலையாக்கிக் காப்போம்!

# உழைப்பை உவந்தவர்

(அரசு அலுவலர் ஒன்றிய மாநிலத் தலைவர் கோ.சூரியமூர்த்தி)



சித்தாலிக் குப்பமொரு சிற்றூர்
சேர்ந்துழைப்போர் வாழுமினப் பற்றூர்
ஒத்தமனத் தாரிவரின் பெற்றோர்
உவப்புடனே இளமையிலே கற்றார்!

ஆதியிலும் இறைநேய முண்டு
அப்போதும் ஆற்றியுள்ளார் தொண்டு!
சாதியுணர் வில்லாமை கண்டு
சான்றோரும் நட்பானார் இன்று.

நன்றிமனம் இவருடைய சொந்தம்
நல்லவரும் தொண்டருமே பந்தம்!
ஒன்றியமே இவர்வாங்கும் மூச்சு
ஊடுருவும் இவருரையின் வீச்சு!

அரசாங்க அலுவலரின் சங்கம்
ஆற்றுபணி சீர்ரொலிக்கு மெங்கும்
முரசானார் முழுத்தலைமை பெற்று
முனைப்பானார் உழைப்பொன்றே கற்று.

குறைகேட்டுக் களைவதற்கே அலைவார்
குணமேறி நின்றார்க்கே வளைவார்
நிறைவில்லாப் பணிகண்டால் குலைவார்
நேர்மைக்குப் பழுதென்றால் கொலைவாள்!

சொல்லாளும் பக்குவமோர் நேர்த்தி
சொல்பிழையார் இயலாமை போர்த்தி
எல்லார்க்கு மேசூரிய மூர்த்தி
இயல்பாக உதவுவதால் கீர்த்தி!

வல்லடியும் சொல்லடியும் வாங்கி
வளர்த்துள்ளார் ஒன்றியத்தை ஓங்கி
இல்லையிவர் ஏதுக்கும் ஏங்கி
என்பதனால் புகழுளது வீங்கி!

அச்சுறுத்திப் பார்த்தவர்கள் ஓய்ந்தார்
ஆணவமாய்ப் பேச்சவிழ்த்தோர் சாய்ந்தார்
குச்சிடறிக் கோளரியா வீழும்?
கோள்தலைமைச் சூரியனா தாழும்?

அண்ணலவர் அன்புநெறி பற்றி
அவர்வரைந்த திட்டமெலாம் வெற்றி!
கண்ணொளியாய் அலுவலர்க்கே ஆனார்
கைகொடுக்கும் எவரிடமும் கோணார்!

தமிழ்

# தமிழ் தெரியாத இறையா?

அவனன்றி அணுவொன்றும்
அசையாதிங் கெனுமிறைக்கு
அருந்தமிழில் அறியாமையா?
எவனுக்கும் புரியாத
ஏமாற்று முணுமுணுப்பே
இறைவனுக்கிங் கினியமொழியா?

வரவுக்கே வழிகாண
வகுத்திட்ட முறைதானே
வடமொழியில் இறைபோற்றுதல்?
குரவர்கள் வழிபட்ட
குறையற்ற மறைப்பாட்டு
கொண்டாடக் குறைகண்டதார்?

ஆண்டாளும் ஆழ்வாரும்
அடைக்கதவம் திறந்தோரும்
அருளியன தமிழல்லவா?
வேண்டாமென் றதைத்தள்ளும்
விதியிங்கே உளதென்றால்
விரைந்ததனை எரியூட்டுவோம்!

வைதாலும் இனிக்குமெனும்
வாகான தனித்தமிழின்
வயமான இறைவனுக்கே
கைதாவும் காசுக்கே
கருவறையை ஆளுபவர்
கனிமொழியைக் கறையென்பதா?

நாடாளும் சட்டத்தை
நடைமுறைக்கிங் கேற்றபடி
நாம்திருத்தல் ஒல்லுமென்றால்
ஆடாக நமையாக்கும்
ஆகமச்சொல் நீக்கியவண்
அமுதூட்டல் வழுவாகுமோ?

உயர்வென்று தமைக்காட்டி
உழைக்காமல் பிழைப்பார்க்கு
உரிமையென முறைசெய்ததால்
பெயர்பெற்றோர் அதைக்காக்கப்
பிடியிறுக்கிப் பார்க்கின்றார்
பிய்த்தெறிந்து தமிழ்பாடுவோம்!

காலத்திற் கேற்றபடி
கோலத்தை மாற்றியவர்
கண்டதொழில் வேறில்லையா?
ஆலயத்துள் தமிழென்றால்
ஆகமத்தைக் காட்டுவது
அறிவார்ந்த ஏய்ப்பில்லையா?

# தமிழால் முடியும்

உருசியத்தைச் சப்பானைப் போலே - சீனா
உயர்ந்ததடா தாய்மொழியி னாலே!
பெருமையெனும் ஆங்கிலத்தின் *மாலே! - அங்கே
பீடிக்க வில்லையத னாலே!

*மாலே = மயக்கமே

ஆங்கிலத்தில் கற்றவர்கள் கோடி - நாட்டில்
அலைகின்றார் வேலையின்றி வாடி!
வீங்கிவிடும் வாழ்வென்றே பாடிக் - கல்வி
விற்றவர்கள் சேர்த்ததுதான் கோடி!

அறிவியல்சீர் நூற்களையே பண்டு - தீயர்
அழிந்திடவே சூழ்ச்சிவழி கண்டு!
பொறிவைத்தார் தமிழறியா மண்டு - நூலைப்
பொங்குபுனல், தீயிலிட்டார் *உண்டு

*உண்டு = சாப்பிட்டு

எத்தனைசொல் தாய்மொழியில் தெரியும்? - தமிழ்
இலக்கியத்தைப் படித்திருந்தால் புரியும்!
வித்தையெலாம் சொற்றமிழில் விரியும் - அட
வெறுக்காமல் தொடுஐயம் சரியும்!

அணுப்பிளப்பை ஔவைசொன்னா ரன்று - மேலும்
அண்டவெளி ஆய்வுரைத்தார் நின்று!
முணுமுணுப்பேன் முயற்சிதனைக் கொன்று? - தமிழா
முன்னேற தமிழுணர்வில்; *ஒன்று!

*ஒன்று = கலந்துவிடு.

தன்னாட்டில் ஆங்கிலத்தைத் தள்ளி - ஆளத்
தரமற்ற மொழியென்றும் எள்ளி
முன்னோடி பிரஞ்சென்று சொல்லி - அங்கும்
முடம்செய்தார் மொழியுணர்வைக் கிள்ளி!

ஆலயத்துள் இலத்தீனே ஒலிக்கும் - ஆட்சி
அரியணையில் பிரெஞ்சிருந்து களிக்கும்
ஏலத்தைத் தாய்மொழிதான் விளிக்கும் - இந்த
இழிவெண்ணிச் சிலர்மனமே சுளிக்கும்.

பதினெட்டாம் நூற்றாண்டில் ஆண்ட - மன்னர்
பாலுண்ட மொழியுணர்வு தூண்ட
வழிசெய்தார் அயல்மொழியை நீக்கி - எங்கும்
வளையவிட்டார் ஆங்கிலத்தை ஊக்கி!

இங்கெதற்கு அயல்மொழியின் ஆட்சி? - ஈதே
இங்கிலாந்து மாசுற்ற காட்சி!
வெங்கொடுமை தாய்மொழியின் வீழ்ச்சி - தாயை
வேண்டாதோர்க் கேதிங்கே மாட்சி!

இங்கிலாந்தின் மன்னன்றான் சார்சு - அன்று
இல்லையெனில் ஆங்கிலமோர் தூசு!
இங்கமுது பெற்றிருந்த தேசு - அங்கே
இருந்ததுண்டோ? தெரிந்திருந்தால் பேசு!

*இங்கு + அமுது = தமிழ்*

# அரைத்தமிழன் அறைகூவல்

அறிவியலும் தமிழுக்கு வருமா? - கற்றால்
அயல்நாடு பணம் பதவி தருமா?
வெறியுணர்வால் மொழிநலனும் பெறுமா? - பெற்றோர்
விருப்பத்தை முடமாக்கல் தகுமா?

இருப்பென்ன தமிழ்மொழியில் காட்டு? - வாழ்க்கை
ஏற்றமுற ஆங்கிலத்தை ஊட்டு!
கருப்பாடு தமிழியக்கம் ஓட்டு! - ஆன்றோர்
காட்டுகின்ற தமிழ்க்கல்வி பூட்டு!

முன்னேற வேண்டாமா நாடு? - நல்ல
மூளைக்கு ஏற்றமொழி தேடு!
தன்னாலே செய்யாத பாடு - தமிழின்
திணிப்பாலே கெடும்நம்மின் பீடு!

தமிழ்ப்பெருமை தொல்காப்பி யத்தைக் - கற்றால்
தழைத்திடுமோ கணிப்பொறியின் வித்தை?
அமிழ்தென்னும் தமிழ்மொழியோர் தத்தைப் - பேச்சு
அணுவியலை விளக்கிடுமோ? சொத்தை!

பத்தெட்டில் பழங்கஞ்சி ஊற்றம் - பத்தாம்
பசலியது வழங்கிடுமோ ஏற்றம்?
வித்தையெலாம் ஆங்கிலத்தைப் போற்றும் - நீங்கள்
விதைப்பதெலாம் விழலொத்த *கூற்றம்.

*கூற்றம் = சொல்

ஆங்கிலத்தில் கற்பதுதான் அருமை - பிள்ளை
அதைக்கற்றால் பெறமுடியும் பெருமை!
தூங்கிசையா லுண்டோமோ விழிப்பு? - வாழ்வைத்
தொலைக்கவழி சொல்லாதீர் பழிப்பு!

வெளிநாட்டில் வேலைபெறும் ஏது - தமிழால்
விளையுமெனில் இங்கதனை ஓது!
தெளிவூட்டும் மொழிக்கல்வி மீது - பழிவாய்
திறக்காதீர் பொங்கிடுவான் சாது!

வயிற்றுக்கு வழிசெய்ய வேண்டும் - கல்வி
வளர்நோக்க மதுதானே யாண்டும்?
பயிற்றுமொழி தமிழென்றால் மீண்டும் - இங்கே
பழங்கஞ்சி பசிநினைவைத் தூண்டும்.

வல்லாண்மை பெற்றமொழி தன்னைக் - கற்றால்
வளர்ச்சிமுனை தொடுமன்றோ விண்ணை!
இல்லார்க்கே தமிழிங்கே அன்னை - அன்னார்
இளைப்பாரக் கட்டியதே திண்ணை.

ஆங்கிலத்தால் ஆகிவரும் நன்மை - பெற்று
ஆளானோர் பலரிங்கே உண்மை!
வீங்குதமிழ் மொழிப்புலத்தின் வெண்மை - இன்று
விற்பனைக்கு ஒவ்வாது உண்மை!

நன்மைசெய்வார் போல்சில்பேர் ஏய்ப்பார் - நாட்டின்
நாற்றிசையும் சென்றுநெறி சாய்ப்பார்
வன்மனத்தர் வக்கணைச்சொல் காய்ப்பார் - அன்னார்
வாயமுதே நம்மழலைத் தாய்ப்பால்.

# கவிதைக் களை!

| | | | |
|---|---|---|---|
| அரசுக | ளெல்லாம் | ஆயுத | மொழித்தன; |
| கட்சிக | ளெல்லாம் | கலைந்தொன் | றாயின, |
| மதங்கள் | மறைந்தன, | மாந்தம் | மலர்ந்தது! |
| மதுவும் | அதுவும் | மறக்கப் | பட்டன, |
| கல்வி | வணிகமும் | கைவிடப் | பட்டது; |
| சமயச் | சாதிகள் | சருகாய்க் | கருகின! |
| வன்முறைக் | காமம் | வளர்கலை | மறைந்தது |
| எங்கும் | அமைதி! | எதிலும் | நிறைவு! |
| பொங்கும் | புரட்சிப் | புதுயுகம் | பூத்தது, |
| அருந்திறத் | தோடிவை | அனைத்தும் | முடித்து |
| இறும்பூ | தெய்தி | எழுந்திடும் | வேளையில் |
| உள்ளரங் | கொன்றில் | உரத்தப் | பேச்சு |
| பாங்கறிந் | தவர்தம் | பட்டிமண் | டபமோ? |
| என்றே | அதிர்ந்தவண் | ஏகிப் | பார்த்தால் |
| புதுசு | மரபுப் | போரவண் | நிகழ்ந்தது! |
| இலக்கண | வடகலை, | ஏனெனும் | தென்கலை! |
| ஒன்றன் | குரள்வளை | ஒன்றன் | கரத்தில்! |
| நெட்டித் | தள்ளி | நிமிர்ந்து | நோக்கி |
| மரபுவாய் | மலர்ந்து | ஓநாய்! | என்றது; |
| புதுசு | பொறுக்குமோ?புரட்டிப் | | போட்டு |
| ஓ...ஓ | நாய்களே | என்றுரை | செய்தது, |
| எதையும் | அமைதியாய் | இருந்தே | சுவைக்கும் |
| பதைப்பிலாத் | தமிழர் | பலே! பலே! | என்றனர்! |
| மூலையி | லிருந்தோர் | முனகல் | கேட்டது |
| வேலைக் | குறைவின் | விளைச்ச | லிவர்களை |
| ஆலைக் | கனுப்புக! | அவசிய | மென்றது! |
| கடின | உழைப்பிலாக் | காலம் | |
| கவிதை | மலிந்து | களையும் | செழித்ததே! |

# இவர்களால் இயலுமா?

மொழிக்கெலாம் முன்பி றந்தும்
மூப்பினை எய்தா தாயே!
வழிபடும் இலக்கி யத்தை
வரிசையாய் பெற்றாய் நீயே!
பழிவழிப் பயணப் பட்டு
பாதியில் நிற்கும் மாந்தர்
அழிவினைத் தடுக்க இன்னே
ஆற்றலை நல்கு வாயே!

காந்தியை வணங்கிக் கொன்ற
கயவனைப் போன்றோ ரிங்கே
ஆந்திர மொழியில் பாட்டும்
ஆங்கிலங் கலந்த பேச்சும்
ஏந்திள முலையார் காட்சி
இந்தியில் படமும் ஆக்கி
தீந்தமிழ் சிதைக்கின்றாரே
தீவினை மாற்ற லென்றோ?

மின்னலால் இடியால் பைங்கூழ்
மேவுவோர் குளிர்வ துண்டோ?
தென்னையும் பனையும் ஈந்தும்
தேர்நடைக் கால்க லாமா?
மன்றுளே முழங்கிக் காசை
மடியிலே முடிப்பார் பேச்சால்
என்றுமே தமிழைச் சூழ்ந்த
இடர்தனைக் களையப் போமா?

# ஏற்ற இடம்

தென்னையிலே கள்ளிப்பால் சுரப்ப தில்லை
திருவில்தான் நிலங்கீறிப் பார்ப்ப தில்லை!
புன்னையிலே புயல்தோன்றி அழிப்ப தில்லை
புடம்போட்டால் தங்கத்தில் மாசு மில்லை!
அன்னையரின் பொதுப்பண்பாம் அன்பு மாறி
அருவருப்பால் தம்மகவைத் தள்ள வில்லை!
பின்னெதற்குத் தமிழினத்தார் மட்டி லிங்கே
பிழைபட்டுத் தாய்மொழியைப் பின்வைக் கின்றார்?

அய்யாவை அண்ணாவைத் தமிழைக் கூறி
ஆட்சிக்கு வந்தவர்கள் அனைத்தும் மாற்றிப்
பொய்யாலும் புனைவாலும் காட்சி யின்பப்
போதையினா லுந்தமிழைப் புதைய விட்டு
நொய்யாக, நோயாக மாற்றிக் கொண்டு
நுகர்கின்றார் பதவிநலன் என்ப தன்றி
மெய்யாகத் தமிழ்நலத்தைப் புரக்கின் றாரா?
மேல்தட்டாய் மாறித்தான் மறக்கின் றாரே!

எல்லார்க்கும் தொடக்கநிலை கல்வி, ஆட்சி
இலவயமாய் வழங்குதற்கே இயலா தென்று
கல்லுக்குக் கலைமெருகை ஏற்றி வைத்துக்
கைகூப்பும் தன்மைபோல் ஆங்கி லத்தைப்
புல்லாக வளரவிட்டுத் தனியார் கல்விப்
புதுவணிகம் செய்வதற்கே வழிகோ லிட்டார்!
இல்லாமற் பிறக்காத ஊழ லுக்கே
ஏற்றநிலம் கல்வியென மாறிற் றென்னே!

மொழிப்பெருமை பறையறைவோர் மலிவா மிங்கே;
முனைப்பில்லாப் பிழைப்பெல்லா மிங்கே, யிங்கே,
பழிக்கஞ்சார் பதவிநலன் துய்ப்பா ரிங்கே!
பணமொன்றே குறியென்னும் ஆண்டோ ரிங்கே!
கழிப்பதற்கே தாய்மொழியைத் தேர்வு செய்து
காசடிக்கும் மோசடிகள் இங்கே! இங்கே!
கிழிப்பதற்கு நாங்கள்தாம் தகுதி என்றே
கிளத்தியவர் மழிக்கின்றார் இங்கே! இங்கே!

குழுகாயம்

# வருமுன் காப்போம்

ஊற்றுநீர் முற்றும் உறிஞ்சிக் குடித்துவிட்டோம்
ஆற்றுநீர் ஓட்டத்தை ஆங்கே அணைகட்டித்
தேக்கித் நமக்கென்றே தீங்குபயிர் செய்கின்றோம்
ஆக்கம் நமக்கென்னும் ஆசைக்குள் மூழ்கிட்டோம்!
தெற்கு வடக்கில்லை தேயமிது ஒன்றென்றோம்
நெற்பயிர்கள் தஞ்சையிலே நீருக்கிங் கேங்கவிட்டோம்!
கட்சிகள் ஒன்றாகும்! காட்சிகளும் மாறிவிடும்
வெட்சியணிக் கன்னடர்கள் விட்டோமா என்பார்கள்!
இங்குள்ள கட்சிகளோ இங்கிதமே இல்லாமல்
பங்குநீர்க் கேட்டிடவும் பாதிநிலா போலிருப்பார்!
நீள்நோக்கே இல்லாமல் நெஞ்சீரம் வற்றிவிட
ஆள்பெருமைப் பேசி அடிவருடிச் சோர்கின்றோம்!
நாளை விளைவெண்ணி நாட்டின் நிலையுன்னி
வேளை நெருக்கும்முன் வேண்டியதைச் செய்யாமல்
தான்,தன் குடும்பமெனும் தாக்கத்தின் ஊக்கத்தில்
வான்பொய்த்த காலத்தும் வாழ்த்து மழைபொழிந்து
காலங் கடத்துகின்றோம், கண்ணீரில் நம்மரபு
ஓலமிடும் நாள்நெருங்கும் உண்மை மறந்துள்ளோம்!
கால்நூறாண் டானாலே கட்டாயம் நீர்ப்பஞ்சம்!
ஆல்பட்டுப் போனால் அருகா தழைத்திருக்கும்?
உண்ணும் உணவுக்கும் உள்வாங்கும் காற்றுக்கும்
எண்ணப் பழுதைப்போல் ஏங்குநிலை தோன்றுமென
ஆய்வறிஞர் பல்லோர் அறிவிப்புச் செய்துவிட்டார்
காய்பறித் துண்போர் கவலையின்றித் தூங்குகிறார்!
நாளைக் கெனவொன்றும் நாம்சேர்த்து வைக்காமல்
ஊளைக் குரல்கொடுத்திங் கூராட்சிச் செய்கின்றோம்.
எண்ணத் தெளிவின்றி ஏற்றமெனும் நோக்கின்றி
மண்ணில் உழல்வதோ மாண்பு?



# வேடிக்கை மனிதர்கள்

*எடுப்பு:*

வேடிக்கை பார்ப்பதே
வேலையாய்ப் போச்சு!
வேதனை என்பதே
வாழ்வென ஆச்சு . . . வேடிக்கை!

தொடுப்பு:

கூடிக்கைத் தட்டலே தொண்டனின் மூச்சு!
கொடுக்கல் வாங்கலே கொள்கையாய் ஆச்சு! ..வேடிக்கை

*கண்ணிகள்*

வள்ளுவர் வாக்கெல்லாம்
வார்த்தையாய் ஆச்சு!
வாழ்க்கையி லந்நெறி
வாராமற் போச்சு!
கள்நிகர் காட்சியில்
கருத்தொன்ற லாச்சு
கடின உழைப்பில்லை
காசுகண் டாச்சு! .. வேடிக்கை ..

மக்களை எண்ணிய மாண்பினர் எண்ணம்
மறந்தே போனதால் மருள்வது திண்ணம்!
அக்கறை அற்றவர் போலிமை முன்னம்
அடிமை யானதால் ஆச்சுது பின்னம்! .. வேடிக்கை ..

ஏழைக் குழைப்பதாய் எல்லோரும் சொல்வார்
ஏட்டிலும் பேச்சிலும் பொய்யையே மெல்வார்!
கூழைக் குடிப்பவர் கூட்டமாய்ச் செல்வார்.
கோட்டையில் வீற்றதும் கொள்கையைக் கொல்வார். ..வேடிக்கை.

# இனி நாம்

அரைஞாண் கயிறும் ஆடையு மின்றி
உரைவா ளேந்தி ஊர்வலம் போவோர்
கிறுக்கை வீரமாய்க் கிளத்தும் ஆட்கள்!
இருக்கும் வரையில் இழிவே ஆடை!
எட்டியே இனிப்பென ஏற்றிப் பாடும்
மட்டிப் பயல்கள் மாகவி ஆனால்
வெட்டுக் கிளியை விடுவார் தூது!
பொட்டி லடித்தும் புரிவார் வாது!
இழிவை இவர்கள் ஏற்றும் பேச்சுப்
பொழிவு கழிப்பில் போட்ட தேமா!

(பொழிவு=சொற்பொழிவு)

பழிப்பிற் கஞ்சார் பக்கம் நின்றால்
அழிப்பைப் பிறர்வந் தாற்றிட வேண்டாம்!

உருக்கும் நோயின் உறவைப் பெற்றால்
பெருக்குமோ காயம்? பேச்சா லிங்கே
பாமர மக்களின் பயன்கள வாளிகள்
வாமன பிறவிகள்! வாழும் மாந்தரை
ஐந்தாய் மாற்றி ஆறாய் மேய்த்திட
நைந்த தமிழில் நல்லற மோதுவார்!
புலம்பும் அறிஞர் போக்கிடந் தேடி
இலவம் பஞ்சின் இழைநலன் போற்றி
ஆலைத் துகிலாய் ஆக்கித் தூக்கி
மேலை நாட்டையும் மிரட்டலா மென்பார்!

போக்கிலி ஆற்றலைப் போற்றிடக் கம்பன்
ஆக்கிய நூலுளும் ஆழ்ந்து தேடுவார்!
மானம் மாறும்! 'மா' நாம் ஆவோம்
ஊனம் நெஞ்சில் உறுத்த அறிவில்
பாலைப் பண்பைப் பாடி
ஆலை அரசியல் வேலையே பார்ப்போம்!

மா = விலங்கு

# மாந்த நேயம்

இளப்பமாய் எண்ணங் கொண்டே
எவரையும் நோக்கல் தீதாம்!
வளப்பமாய்த் தெரிவார் தம்முள்
வறுமையை அகத்தில் காண்பீர்!
களமெது வான பொதும்
கருத்துதான் ஆள வேண்டும்
அளவிடுங் கருவி யாக
அறிவுதா னாக வேண்டும்!

இலரெனப் படுவா ரிங்கே
இருப்பவ ருள்முக் காலே!
சிலர்பொருட் குவித்தி ருப்பார்
சிலரருள் சேர்த்தி ருப்பார்
பலமெனப் படுவ தென்ன?
பருவுடல் வலிமை தானா?
குலமெனப் படுவ தெல்லாம்
குடிப்பிறப் பொன்று தானா?

மனதினால் வறியா ரிங்கே
மாளிகைக் கூண்டுக் குள்ளே!
இனவுயர் வோது வாரும்
இழிசெயல் புரிகின் றார்கள்!
கணமெனக் கருது மாட்கள்
கல்மனம் பெற்றி ருப்பார்!
தனமெனில் அறிவே! செய்யும்
தகுவினை விழுப்பம் ஆமே!

குறியெதிர்ப் பின்றி யார்க்கும்
கொடுப்பதே அறத்தின் பாதை!
நெறிநினை வோடு வாழ்ந்து
நிலைப்பதே உயர்வின் ஓதை!
வெறியெனும் வெப்ப மின்றி
வினைநலன் புரிவார் மட்டும்
தறிதரும் ஆடை போலே
தழுவலாம் மாந்த நேயம்!

# வற்றாத ஊற்று

பிள்ளையார் பால்குடித்தா ரென்றால் கேட்போர்
பிதற்றலென எண்ணாமல் ஊற்றச் செல்வார்!
கொள்கையிலார் சாதிவெறி யூட்டிச் சொந்த
குறிக்கோளில் போலிநலன் புகல்வார், அந்தக்
கள்ளமனக் காரர்சொல் கதையை நம்பிக்
காலமெலாம் தேய்ந்தவன்றான் தமிழன், இன்றும்
எள்முனையும் பகுத்தறிவை ஏற்றா னில்லை;
இருள்பக்தி என்பதிவன் வற்றா ஊற்றே!

அறிவியலில் முன்னேற்றம்; அணுவின் ஆற்றல்
அறிந்தடக்கி வெடிப்பதிலே வெற்றி, விண்கோள்
நெறிப்படுத்தி ஏவுவதில் திறமை, மாற்றார்
நினைத்தயர ஏவுகணை கண்ட பின்னும்
கறிக்கடையை வட்டமிடும் குக்கல் போலே
கற்பனையை நம்பியதைச் சுற்றிச் சுற்றி
அறியாமை வேர்பிடிக்க நீரைப் பாய்ச்சும்
அரும்பணியில் திளைப்பதிவன் வற்றா ஊற்றே!

புல்வெளியைத் தேடிவந்த கூட்ட மொன்று
பொருட்கொள்ளை யிடவந்த கூட்ட மொன்று,
பல்பொருளுக் கங்காடி காண வேண்டிப்
பண்டமுடன் வந்ததொரு கூட்டம், பின்னர்
அல்மனத்தின் ஆசையினால் வேலி தாண்டி
ஆள்வதற்கு மண்பிடித்த கூட்டம் என்றிங்(கு)!
எல்லாமே தமிழினத்தை மொழியை வீழ்த்த
எண்ணுகிற மனமிங்கே வற்றா ஊற்றே!

அறிவியலில் நம்முன்னோர் கண்ட வெற்றி
அடையாள நூலொன்று மில்லை, வந்தோர்
குறிவைத்தே கொண்டேகி விட்டார், நாமோ
குதிக்கின்றோம் எஞ்சியதை ஏந்திக் கொண்டு,
பொறிவைத்த வடைநுகர்ந்தே சிக்கிக் கொள்ளும்
பொருள்நுகரும் எலியாகி விட்டோம், சொத்தைப்
பறிகொடுத்த உணர்வில்லை! தேட லில்லை!
பண்பிதுதான் தமிழினத்தின் வற்றா ஊற்று!

மதத்தாலே மனப்பிளவை வளர்த்துக் கொண்டு
மல்லாடி நிற்கின்றோம், மாந்த நேய
இதங்காட்டிப் போற்றாத இதயம் பெற்றோம்;
இன்றிதிலும் துருப்பிடித்த தென்னே! நாளும்
பதம்பார்த்துச் சமைத்துண்டு கொழுத்தார் செய்த
பாழான சாத்திரத்தைச், சடங்கைப் போற்றிக்
குதம்சேர்ந்த உணவாகிப் போனோம், இந்தக்
குறைமட்டும் தமிழனத்தின் வற்றா ஊற்றே!

தன்னினத்தைப் பகைப்பதிலும், தளுக்காய்ப் பேசும்
தமிழ்ப்பகையை நயப்பதிலும், அயலா ருக்குச்
சென்றேவல் செய்வதிலும் வெளிப்பண் பாட்டைச்
சிறப்பென்றே ஏற்பதிலும், பொய்யென் றாலும்
தென்னையிலே புல்பறித்தேன் என்றால் நம்பித்
தீனியிது பசுக்கென்னும் தமிழர்க் கிங்கே
என்றென்றும் பற்றறுத்தே இழிவை ஏற்க
ஈராழி மனமுண்டு; வற்றா ஊற்றே!



# புதியதோர் உலகம்

உள்ளத்தில் ஒட்டடையை உதறித் தள்ளி
உழைப்பூக்கும் நல்லொழுக்க உயர்வு நல்கி
பள்ளத்தில் பாய்கின்ற வெள்ளம் போலே
பரிந்துதவும் பக்குவத்தை வளர்த்துக் கொண்டு
குள்ளமெனப் பெண்ணினத்தை எண்ணா ராகிக்
குடி,களவை வேரறுத்துப் பொதுமை போற்றித்
தெள்ளுதமிழ் ஆட்சிசெயத் தீமை தீண்டாத்
திருமலிந்த புதுவுலகைப் படைக்க வாரீர்!

அறிவியலால் வளர்கின்றோம், அகந்தை நெஞ்சுள்
அண்டிவிடும் என்பதனால் தற்காப் பாக
நெறிப்படுத்தும் தோதாக நினைத்து முன்னோர்
நெய்தகதைக் கடவுளரைத் துணைக்க ழைக்கக்
குறிகெட்டுக் கூச்சலிடும் விழாவெ டுத்துக்
கொண்டாடிப் பொருளழிக்கும் குறையே கண்டோம்!
வெறியாடும் மதத்திற்கே தோது சேர்க்கும்
விளையாட்டை ஒழித்துயர்ந்த உலகம் செய்வோம்!

அளவற்ற ஆசைதனை வளர்த்துப் போற்றி
அதிகார போதையகம் முகந்து கொண்டு
மளமளவென் றுயர்ந்திடவே மார்க்கம் கண்டு
மனத்தழுக்கை நல்லுரையால் மறைத்துக் கொண்டு
தளர்வின்றித் தனிப்பெருமை செல்வம் சேர்க்கத்
தன்முனைப்பைக் காட்டுகிறோம் அதற்கேற் பாக
வளப்பமுறு கட்சிகளைப் படைத்துக் கொண்ட
வழக்கொழித்து வளமான உலகம் செய்வோம்!

# கேட்டால் நல்லது

குற்றங் குறைகள்
குவிந்தி ருக்கும்
குறைத்துக் கொள்ள முந்து
வெற்றுப் பேச்சு
வீணாம் காலம்
வேண்டாம் வெறுத்து எந்து!
கற்றுக் கொள்ளக்
கலைகள் நூறு
கையி லுண்டு பந்து
முற்றும் முன்னர்
முனைப்பை விட்டால்
முடிவில் நிற்பாய் நொந்து!

இல்லை என்றே
ஏங்க வேண்டாம்
இரண்டு கையை நம்பு
தொல்லை தந்து
எதுநின் றாலும்
துணிந்தே அறிவால் நெம்பு
எல்லை யற்ற
கல்விச் செல்வம்
என்ப தொன்றே தெம்பு
நெல்லை விற்றும்
உமியை வாங்க
நினைக்க வேண்டாம் வம்பு!

உழைப்பின் மூலம்
உயரும் எண்ணம்
ஊற்றாய்ப் பெருக வேண்டும்
அழைக்கும் தீமை
ஆசை காட்டி
அறத்தை வீழ்த்தத் தூண்டும்
பிழைப்பில் நேர்மை
பேச்சில் தூய்மை
பிறழ வேண்டாம் யாண்டும்
மழைக்கி ருக்கும்
மாண்பை ஈட்டி
மாந்தர் வாழ வேண்டும்!

அடக்கம் விட்டார்
அறிவும் கெட்டால்
ஆட தூண்டும் துள்ளி
இடக்கே பேசி
இழிவைப் பூசி
இடற வேண்டாம் எள்ளி
கடக்கும் தூரம்
கருதும் நேரம்
கவிழ்ந்தால் முற்றுப் புள்ளி
நடக்கத் தேறு
நல்ல பாதை
நமக்கு நாமே பள்ளி!



# பேச்சு

பேசுக நன்றே! பேசுக வென்றே!
பிழையண் டாமல் பெருமை தோன்ற
தூசினைக் கழுவும் தூமழை போன்றே
தோன்றிடு மாசினைத் தொலைக்கப் பேசுக!

நூலை ஆய்ந்தே நுண்ணறி வோடே
நுகர்வோர் வியக்க நுட்பமாய்ப் பேசுக!
ஆலைச் சங்கென அலறிட வேண்டாம்
ஆழ்ந்த பொருளை அகழ்ந்தெடுத் தோதுக!

சிரிக்கப் பேசுதல் சிறியோர் நுட்பம்
சிறக்கப் பேசுதல் சிந்தனை ஒட்பம்
விரிக்கும் சொல்லில் வெப்பம் வேண்டாம்
வேட்கும் தண்மையே விரவிட வேண்டும்.

கொக்கு குருகாய்க் கூற்றை நீட்டும்
குறையை அரங்கில் கொட்டிட வேண்டாம்
சொக்கத் தங்கம் சுடர்விடல் போலே
சுருங்கச் சொல்லிச் சுவைதர வேண்டும்.

விழுதுச் சொல்லும், பழுதுக் கருத்தும்
பொழுதைக் கொல்லும் பொல்லா வேலாம்
எழுதும் கோல்போல் எல்லை தாண்டா
இலக்கணம் பேணும் இயல்பே பேச்சாம்.

# குமுகாயக் கடமை

நீதியைத் தின்னும் நாய்கள்
நிற்பதைக் கண்டொ துங்கி
ஓதற மேன்மைக் காப்பை
ஒப்புறப் பேசிச் சென்றால்
காதிலே பூவைத் தோனும்
காரியே துப்பப் பார்ப்பான்
வீதியில் கண்ட தீமை
வீட்டையும் தேடும் நாளை!

தீமையைக் காணக் கண்ணைத்
திறக்கவே மாட்டே னென்பார்
ஆமையாய் மாறி ஆண்மை
அடக்கியே வாழ்வார் தம்மை
ஊமையன் கண்டால் கூட
உணர்வினால் எள்ளிச் செல்வான்
தாமரைத் தண்டுப் பாம்பைத்
தளிர்கொடி என்ன லாமா?

அன்னியர் ஆண்ட நாளில்
ஆரிடர் சூழக் கண்டோர்
இன்னலுக் கஞ்சி டாமல்
எப்படி ஆர்த்தெ திர்த்தார்!
அன்னவர் தோன்ற லென்றே
ஆர்வுடன் சுட்டிக் காட்டத்
தென்னவா தேடிப் பார்த்தும்
தென்படும் ஆளே இல்லை.

கோதிலார் போல்தோன் றும்
கோழைகள் மீறக் கண்டோம்!
நாதியாய் நாம்நம் பிட்டோர்
நம்பகம் வீழக் கண்டோம்!
ஏதிலார் வாக்குக் காக
எத்தனை மாற்றம்! அன்னார்
ஓதிட உண்மை யாக
உழைத்திடக் கண்டோ மில்லை!

கோதிலார் = குற்றமற்றவர் நாதியாய் = உடன்பிறப்பாய்
ஏதிலார் = ஏழையர் ஓதிட = கூறிட, பேசிட

கண்ணியம் கெட்டோர் கொஞ்சம்
கைகளில் ஊட்டி விட்டால்
எண்ணிய தெல்லாம் செய்ய
ஏற்பினை நல்கு கின்றார்கள்!
கண்மயிர் கொண்டு வேழக்
கால்களைப் பிணைப்பம் என்பர்!
பெண்மயில் பீலி தன்னில்
பேசிடும் கண்கள் தோன்றா.

அல்லவை நடக்கக் கண்டும்
அவைநமக் கன்றென் றெண்ணி
ஒல்லையில் ஒதுங்கி நின்றே
ஊர்நல உரைசெய் கின்றார்
எல்லையுள் இயற்றும் தீமை
ஏனெனக் கேளார் தொண்டு
நல்லியல் தானா என்றே
நாட்டினர் கேட்க வேண்டும்.

# ஐந்தருவி

### காலம்

ஓலமிட்டு யாரழுது ஓடாதே நில்லெனினும்
கோலமிட்ட எம்மில்லில் குந்தென்று சொன்னாலும்
காலமெவர் கட்டளைக்கும் கட்டுப் படாதிந்த
ஞாலத்தில் காலம் பெரிது.

### எதற்கு எது?

இல்லுக் கழகங்கே ஈன்றார் நடமாட்டம்
சொல்லுக் கழகரங்கில் சூழ்ந்தாரை இன்புறுத்தல்
கல்லுக் கழகு கலையாகிக் காட்சிதரல்
வில்லுக் கழகாம் விசை.

### பண்பிற் குண்டோ பழுது

கொள்ளியின் நாதீண்டிக் குன்று பொசுங்கிடுமா?
வெள்ளிப் பொன் வெண்கலங்கள் வெந்துகரி யாகிடுமா?
அள்ளிப் பழிசுமத்தி ஆன்றோரைத் தூற்றிடினும்
புள்ளிசொல் லாமோ புகல்?

### மக்கள் பெற்றது ..... ?

ஏய்ப்பாரென் றெண்ணார் எழுதிவைத்த சட்டத்தை
வாய்ப்பாக்கிக் கொண்டவர்கள் வாழ்வுநலன் துய்ப்பதற்குத்
தாய்ப்பாலாம் மக்களாட்சி தந்ததெலாம் மக்களுக்கு
தோய்ந்தமை காய்ந்தகுறி தான்.

### கல்லும் கண்ணாடியும்

பெற்றெடுத்த அன்னையுளம் பேதலிக்க விட்டுவிட்டுச்
சிற்றம் பலம்நாடிச் சேவிப்பார் - பொற்றொடியே
ஆடி உருக்காட்ட ஆலயத்தின் கற்சிலையை
நாடித் திரிவதுவோ நன்று?

# அடிமை மனம்

வெறும்பேச்சு வேளாண்மை வீதி யெங்கும்
விடியாத பின்னிரவு விண்மீன் கூட்டம்
குறுங்குடியின் கொடிபடைகள் குமுகா யத்தைக்
கூரையிலா வீடாக்கும் கொக்க ரிப்பு!
நறுந்தேனை நஞ்சென்றால் நம்பு தற்கும்
நவின்றவர்க்கு வாழ்த்துரைத்து நத்து தற்கும்
பொறுப்பறியாப் புல்லறிவுக் கூட்ட மிங்கே
புற்றெடுக்கும் செல்லொப்பப் பெருகிற் றந்தோ!

எவர்கொடுப்பார்? எதுகிடைக்கும் என்ப தொன்றே
இலக்காகிப் போனதனால் தமிழர் மண்ணை
உவர்நிலமாய் மாற்றிட்டார்! ஒண்'_ வந்தோர்
ஊட்டமுற உச்சிக்கே உந்தப் ட்டார்!
சுவர்தனிலே ஒட்டுகின்ற விளம்ப ரத்தைச்
சுற்றிவரும் மாடுண்டு கொழுத்தாற் போலே
எவரெவரோ எசமானர் ஆனார், மானம்
இளைப்பதற்கே வழிவிட்டோம்; இழிந்து போனோம்.

அடிமைகளாய்த் தொடர்வதற்கே ஆர்வப் பட்டோம்
அகமொன்று புறமொன்றாய் வேறு பட்டோம்!
கொடியேற்றி அணிவகுக்கும் பெண்ணும் கூட
குடும்பத்தில் ஆணடிமை! வீரம் பேசி
அடியாளாய் உடல்வலிமை காட்டும் ஆணோ
அரசியலில் அடிவருடி; அடிமை! ஆமை!
அடியெல்லை இல்லாத பாட்டைப் போலே
அயலாரின் நகலேடு! அடிமைக் கூடு!

அடிதடியில் முன்னிற்போம்! அழிவு செய்வோம்
அடாவடியாய் வழிபறிப்போம்,ஆன்றோர் தம்மைக்
கடிதுரைத்துக் கண்கலங்கச் செய்வோம், கெட்ட
கழிசடைகள் காலடியில் கிடப்போம், நேர்மை
படியிறங்க விட்டிடுவோம் பண்பைக் கொன்று
பலவிடரும் சூழ்ந்திடுவோம்! பருத்த மாடு
தடிப்பயல்நாம் மனத்தாலே அடிமை! மாற்றார்
தாளடியில் தன்மானம் புதைத்து வைப்போம்.

அஞ்சுதற்கிங் கஞ்சிடவே மாட்டோம், நேர்மை
அகத்தாரை ஏறெடுத்துப் பார்க்க மாட்டோம்
கெஞ்சுதலைக் கீழ்மையென எண்ண மாட்டோம்
கேடியற்றி மேலுயரும் வழியைக் கேட்போம்!
வஞ்சகமும் வஞ்சினமும் கொள்வோம், கொஞ்சம்
வரும்படியில் கைவைத்தால் வைரி யாவோம்
நெஞ்சிரக்கம் அற்றோம்யாம் அடிமை மாக்கள்
நிலையான எடுபிடியாம் நெருங்க வேண்டாம்!

# நம்பிக்கை

உன்னுடை அறிவை நம்பும்
உணர்விலை அதனால் தாழ்ந்தாய்
உன்னுடை திறனைக் காட்டும்
உழைப்பிலை அதனால் வீழ்ந்தாய்
உன்னுடை செல்வம் ஈந்தே
உதவிடாக் கஞ்சன் ஆனாய்
உன்னுடை பற்றைக் காட்டும்
ஒற்றுமை இன்றிப் பட்டாய்!

வலியுகிர் வேங்கை வாழ,
வாழ்ந்திடு மங்கே மானும்
நலிதரும் தொழிலி னூடே
நயனுடை வணிக மோங்கும்
எலியெனப் பதுங்கு மெண்ணம்
இயல்பெனில் வளர்ச்சி ஏதாம்?
ஒலிதரும் மூங்கில் காட்டில்
ஊடிடும் காற்றாய் மாறு!

சிற்றினப் புல்லைக் காளை
சிதைத்துமே மேய்ந்திட் டாலும்
புற்றெனக் கிளைக்கு தன்றோ
போனதே முதலென் றாலும்
வற்றிட வேண்டா ஆர்வம்
வழிமுறை புதிதாய்த் தேடு
கற்றதைச் செய்து காட்டு
கடிதுழை, வறுமை ஓடும்!

தழற்படு மரமுங் கூட
தளிர்த்திடும் போது மாந்தா!
இழப்பெது வரினும் தாங்கா
திடிந்துமே கலங்க வேண்டா!
குழப்புவர் சூழ்ந்தோர், தோல்வி
குன்றென நின்ற தில்லை
சுழற்படும் படகும் மீளும்
சுடர்விடும் திறமே ஆளும்!

எலிவளை தன்னைத் தூர்த்தால்
இரவிலே மீண்டும் தோண்டும்
வலியிலா சிலந்தி பின்னும்
வலையற மீண்டும் நெய்யும்
நலிவுறா முயற்சி யொன்றே
நடப்பிலே வெற்றி ஈட்டும்
மலிவெனும் மடியை ஓட்டு
மறவனாய் வாழ்ந்து காட்டு!



# திருமணம்

மாந்தரின மாண்பான ஒழுக்கத் திற்கு
மனப்பிணைப்பை உருவாக்கும் நிகழ்வு; பொங்கர்ப்
பூந்தாதில் காலூன்றித் தேனெ டுக்கும்
பொறிநுகர்வு வாய்ப்பளிக்கும் உறவு; யாரும்
சேந்தாமற் கிடந்திட்ட வாவி நீரில்
செப்புதனை மூழ்கவிடும் விழவின் கால்கோள்!
காந்தத்தை மென்னிரும்பு கவ்விக் கொள்ளும்
காட்சிக்கு ஒளியேற்றம் செய்யும் நாளே!

பொதுவுறவைப் புதுவுறவாய் மாற்றும், நெஞ்சில்
பொங்குணர்வைத் தங்குணர்வாய் ஏற்றும், தேர்ந்தே
எதுசெயினும் பொறுமையதில் காட்டும், ஆணை
இல்லறத்தின் தலைவனென மாற்றும், வாழ்வில்
மதுமலரின் எழில்மணத்தைக் கூட்டும், பெற்றோர்
மகிழ்ச்சியுறப் புதுவரவைக் காட்டும், அந்நாள்
பதுமையெழில் கூடமெரு கூட்டும், எண்ணில்
பண்பாட்டு மரபைநிலை நாட்டும் நாளே!

செல்வத்தைச் செல்வாக்கைக் காட்டு தற்குச்
சிலரிதையே களமாக்கிக் கொள்வர், அங்கும்
இல்லாத உறவுக்கோ செலவுச் சிக்கல்
எதிரில்லா நிலநீராய் நினைவி லாடும்
ஒல்லாத கடன்சுமையை ஏற்றிக் கொண்டும்
உதவாத சடங்குகளை நம்பிக் கொண்டும்
நல்லாற்றும் நடைமுறையைத் தள்ளி வைத்தும்
நமைத்தாழ்த்தும் நாய்க்குரைப்பும் அரங்க மேறும்!

ஒன்றரையாம் மணிநேரச் சடங்கில் பெண்ணின்
உரிமைதனைத் தனதாக்கிக் கொள்வா ரோராண்!
அன்னைக்கும் தந்தைக்கும் சுமை குறைந்த
அகமகிழ்வு நீடிப்ப தரிய பேறாம்!
கன்றுதனைப் பிரிகின்ற பசுவைப் போலே
கண்கலங்கும் நிலைகூட தொடரும் அங்கே!
என்னென்ன வரவென்றே பிள்ளை வீட்டார்
ஏடெழுதிச் சரிபார்ப்பார் இதுவே மன்றல்!

அடிதொட்டு முடிவரைக்கும் பெண்க ளுக்கே
அடையாளக் குறியீடு மணநாள் தொண்டு!
மிடிமைதனை ஏற்பதுதான் கற்பென் கின்ற
மேலாண்மை ஆண்சூழ்ச்சித் தொடக்க மிங்கே!
விடியலெனில் வெய்யோனின் வருகை தானே?
விளக்கேற்றல் இருளிருப்பின் விளக்கந் தானே?
முடியென்றே முள்சூட்ட மகிழும் பெண்ணே!
முந்தைநிலை கண்டுதெளி, வாழ்ந்து காட்டு!

# புலம்பல்

கடமைமறந்து உரிமைகோரும்
காலமடா காலம்!
கட்சியென்னும் புதுமதங்கள்
கடைவிரிக்கும் ஏலம்!
மடமைதன்னை வளர்க்குதிவண்
நமதுதொலைக் காட்சி!
மாலைவந்தால் போதுமதில்
பக்திக்கதை ஆட்சி!
குடம்நிறைந்த மதுவெனவே
கொடுக்குதடா காட்சி
குறிப்புநலன் அறிவுவளம்
குடைகவிழ்ந்தே போச்சு!
அடம்பிடிக்கும் மழலையாக
ஆகிவிட்டார் மக்கள்
அழிந்துவந்த மூடந்தன்னை
அகழ்வதுதான் சிக்கல்!

தந்தைபெரி யாருழைப்பை
தவிடுபொடி செய்தார்!
தலையெடுத்த பகுத்தறிவின்
துளிரையின்று கொய்தார்!
பந்தயத்தில் வெல்வதொன்றே
பலர்க்குமின்று நோக்கம்
பழிவழியில் பொருள்திரட்டிப்
பார்ப்பதில்தான் ஊக்கம்!
சிந்தைநலன் பேணுகல்வி
சீரழிந்தே போச்சு!
செல்வவழி காட்டுவதே
சிறப்பறிவாய் ஆச்சு!
தந்தநிலா வெள்ளொளிதான்
தந்தநன்மை என்ன?
தகுதிநேர்மைக் கில்லைநிலம்
எங்குப்பயிர் பண்ண?

வெற்றுரையாம் பட்டிமன்றம்
விரும்புகின்றார் மக்கள்
வீழ்ந்துவிட்ட பண்பைஎண்ணி
வெடித்துமனம் சுக்கல்!
பற்றுவைத்த தமிழ்மரபு
பட்டமர மாச்சு
பதவிபண வேட்டையிலே
பலவுணர்வும் போச்சு!
இற்றுவிழும் பழுப்பிலையாய்
இலக்கியத்தைத் தள்ளி
இரவலையே ஏற்றுகிறார்
தமிழ்மரபை எள்ளி!
வெற்றிவேராய் சிலபுலவர்
விளங்குவதும் உண்மை
விழலறுத்தே அவஞ லுத்தால்
விளைவதெங்கே நன்மை?

குண்டரினை வாழ்த்துகின்ற
வாழ்வுமொரு வாழ்வா?
குடிநலனுக் கூறுசெய்வோர்
குறிப்பெதிர்த்தல் தாழ்வா?
பண்டபானை போலிருந்தால்
பஞ்சமோடிப் போமா?
பாடுபடு வோர்க்குதவப்
பயந்துசாக லாமா?
அண்டமிதில் அழியுமுடல்
அருமைதனைப் பேண
அடிவருடிக் கொடியவர்க்கும்
அடங்கலாமோ நாண
கொண்டுவந்த தொன்றுமில்லை
கொடுக்கவெண்ணும் போது
குறுகுறுக்கும் நெஞ்சமைதி
கொள்ளஎன்ன ஏது?



# பிறந்த நாள்

உலகைப் பார்க்க
ஒலியைக் கேட்க
கலகம் விளைத்தே
கருச்சிறை தகர்த்தே-
பிறந்தநாள்-கண்திறந்த நாள்!

சுமையாய் இருந்து
சுகமாய் மலர்ந்து
இமையா இரவை
ஈன்றார்க் களித்திட
பிறந்தநாள்-கண்திறந்த நாள்!

தாயின் கருவில்
தனித்தமிழ் போலே
நோயண் டாமல்
நோகா திருந்தே
பிறந்தநாள்-கண்திறந்த நாள்!

அன்பில் ஆழ்ந்தும்
இன்பில் தோய்ந்தும்
என்புக் கோட்டை
ஏனெனத் துறந்து
பிறந்தநாள்-கண்திறந்த நாள்!

உயிரெலாம் ஒன்றெனும்
ஒருமை பகைத்தே
பயிரிடும் வேற்றுமைப்
பலனைத் துய்த்திடப்
பிறந்தநாள்-கண்திறந்த நாள்!

தன்னலம் பேணிடத்
தகுநெறி பிழைத்தே
இன்னலைத் தருவோர்க்
கேணியாய் ஆகிடப்
பிறந்தநாள்-கண்திறந்த நாள்!

# இழிவினை ஏந்திக் கொண்டோம்

உமிதனைப் பொன்தூ ளென்றோம்
உரலினைக் குன்ற மென்றோம்
குமிழ்தனைக் கோட்டை என்றோம்
குடைதனை மேக மென்றோம்
தமிழரின் மாண்பைப் பேணும்
தகுதியைத் தோற்று விட்டே
இமிழ்கடல் ஞாலம் எள்ளும்
இழிவினை ஏந்திக் கொண்டோம்!

பவளமே ஈதென் றோதிப்
பறித்தனம் ஈந்தை! காய்ந்த
துவரையின் தோலைக் காட்டித்
தொடுமணி மாலை என்றோம்
தவளையின் கூச்சல் முன்னே
தனித்தமிழ் தோற்ற தென்றோம்
குவளையின் அழகில் தோய்ந்து
குமட்டிடக் கொட்டை மென்றோம்!

கன்றிலாப் பசுவைக் கட்டிக்
கறந்திட ஆசைப் பட்டோம்
நன்றிலா வினைகள் தம்மை
நயந்துமே வியந்து கண்டோம்
குன்றிலே வலையை வீசிக்
குரவையைத் தேடச் சென்றோம்
அன்றிலாய்க் கழுகைப் போற்றி
அயலவர் நகைப்பைப் பெற்றோம்

# முரண் தொடை

அண்டம் வெடித்திடும் கண்டம் பொடித்திடும்
ஆற்றலின் ஊற்றணு குண்டு
அச்சுற வைத்தது கண்டு
பண்டம் பதுக்குவோர் கண்டு பயின்றிடும்
பான்மையில் வல்லர சின்று
பாழ்தனைக் காத்தது நன்று!

அஞ்சிக் நடந்தவர் கெஞ்சிக் கிடந்தவர்
ஆட்சியில் பங்கினைக் கேட்டார்
ஆக்கினைக் குட்பட மாட்டார்
துஞ்சிக் கிடந்தவர் விஞ்சும் உணர்வினால்
தூக்கினர் போர்க்கொடி ஆர்த்து
தோற்றது மேட்டிமை வேர்த்து

தன்னை மறந்தவர் தாக்கம் துறந்தவர்
தாயகம் காத்திட வந்தார்
தூயநற் றொண்டிலே வெந்தார்!
பின்னைப் பிறந்தவர் பேச்சிற் சிறந்தவர்
பெற்றனர் முற்றிய நன்மை
பேணினர் தன்னலம் உண்மை!

போற்றும் அறிவியல் ஆற்றும் திறத்தினால்
ஏற்றமே பெற்றது நாடு!
ஏழையேன் பெற்றிலை பீடு?
மாற்றம் நிகழ்ந்திட ஏற்றம் பொதுப்பட
மானுடம் வென்றிட வேண்டும்
மாற்றலர் வீழ்ந்திட யாண்டும்.

## இயற்கை



# செம்பரிதி

வெப்பம் விளைத்து, நாளும்
வெளிச்சம் கொடுத்து, பூமிக்(கு)
அப்பன் எனுமோர் பந்தம்
ஆன கனற்கோள் பந்தே!
கப்பும் இருளை யுண்ணும்
கனலியே! நாவல் செங்காய்
செப்பு நிறத்தைக் காட்டும்
செந்தீப் பரிதி வாழ்க!

தாவர இனத்திற் கிங்கே
தருகிறாய் பச்சை! நாளும்
தீவலம் வந்த போதும்
தேங்கிய நீரெ டுத்தே
பாவலன் படைப்பைப் போலே
பயன்மழை தருகின் றாயே!
ஆவதிங் கெல்லாம் உன்னால்
ஆதவா! நீதான் மூலம்!

உன்கரம் நீளம்! பூமி
உருண்டையின் சக்தி நாளம்!
வன்கணர் வினையால் யார்க்கும்
வரும்சினம் போலு னக்கும்
என்னதான் சினமோ? கோடை
எரிதழ லாகின் றாயே?
இன்னலை மக்கட் கீயும்
இயல்பினை எங்குக் கற்றாய்?

கோள்களில் மூத்தோன் நீதான்
கொடுப்பதில் குமணன் தோற்றான்!
தூள்படும் பூமி காணும்
தொழில்களின் முனைவன் நீதான்!
ஆள்வினை மறந்த மாந்தர்க்
காதவா நீயே ஊற்றம்!
வாள்வினைக் களத்தோற் றத்தை
வரைவதேன் மாலைப் போதில்?

சப்பிய பனம்ப ழத்தின்
சாயலைக் காட்டி னாலும்
அப்பழுக் கில்லை, உன்னை
அண்டவோர் பகையு மில்லை!
துப்பிய தாம்பூ லத்தால்
தோன்றிடும் கறையை வானம்
செப்பியே நொந்தி டாமல்
செய்கிறாய் விந்தை மாற்றம்!

இப்புவி வளத்திற் கெல்லாம்
இரவிநீ தானே மூலம்?
செப்புதே சிலம்புங் கூட
செவியின் புறவே ஞாலம்!
ஒப்பியே நிலவுக் குன்றன்
ஒளிதனை உதவி ஊக்கும்
செப்பரும் பண்பைப் போற்றிச்
சிந்தையால் வணங்கு கின்றோம்!



# நாரை நடை பயில

ஊனில் கலந்திருக்கும் ஊற்றம் கொடுத்திருக்கும்
வானின் றிழிந்துவந்தே வாழ்வளிக்கும்-ஆனின்
அமுதொக்கும் எவ்வுயிர்க்கும் ஆர்த்துவரும் காரே
கமுக்கமிலா உயிருக்குக் காப்பு!

வெய்யோன் துணையிருந்தால் வீசும் வளியிணைந்தால்
பெய்ய வரும்முகிலின் பீடறிந்தால்-உய்யவழி
உண்டாம், உலகூட்டும் ஒப்பரிய வான்மழையைக்
கொண்டாடிக் கையெடுத்துக் கூப்பு.

குட்டைக் குளம்தூர்த்துக் கோயில், குடியிருப்பாய்க்
கட்டக் கரைநிரவக் காண்கின்றோம்-மட்டின்றிக்
காட்டை அழித்துக் கறைசெய்த காற்றோடிக்
கூட்டி வருமோகார் கூறு?

வான்பொய்த்த தென்றிங்கே வாய்மலரக் கற்றோரே!
ஏன்பொய்த்த தென்பதனை எண்ணுங்கள்-தேன்துய்க்கத்
தோட்டம் துரவோடே தும்பி உழைப்பிருந்தால்
ஊட்டத்தேன் கூடுயரும் உன்னு!

மக்கள் பெருகி மழைக்குறி தோன்றிடுமோ?
ஒக்க மரஞ்செடியை உண்டாக்கு-சிக்கனமாய்
நீரைச் செலவிட்டு நீர்நிலையைக் காத்திட்டால்
நாரை நடைபயிலும் நம்பு.

# எங்கள் மலை

இடிக்காதே என்றுநிலா கெஞ்சும்-என்னை
இறக்கிவிடு என்றுமுகில் கொஞ்சும்!
தடிக்காதே என்றுநிலம் அஞ்சும்-அங்கே
தரையிறங்கா வெண்பனியே துஞ்சும்!

ஏவுகணை ஒத்திருக்கும் கூம்பு- அதில்
இழிந்துவரும் இன்சுவைநீர்த் தாம்பு!
பாவுகளாய்ப் பனியுருகி ஓடும்-அது
பாதிவழி வந்துதொடும் காடும்!

விண்மீன்கள் முகம்பார்க்கும் ஆடி-மலை
விரைத்திருக்கும் வெண்முல்லைச் சூடி!
கண்களிக்கும் கவின்காட்சி கண்டு-அதைக்
கவியாக்கும் திறனெவர்க்கே உண்டு?

தெங்குமுடி போலிருக்கும் உச்சி-கண்டு
தீட்டிடலாம் ஓவியமும் மெச்சி!
பொங்கொளியில் பொற்குன்ற மாகும்-காணப்
போதாமை கிரங்கிவிழி நோகும்!

மூலிகைகள் குடியிருக்கும் வீடு!-அதில்
முதுமையிலும் வீற்றிருக்கும் பீடு!
வேலியெனக் கொண்டதனை நாடு-புகழ்
வீங்கியதே மெய்யுருவைப் பாடு!

அன்னியனும் அம்மலையைத் தொட்டான்-நம்பால்
அடிவாங்கி மிரண்டோடி விட்டான்!
பின்னைவர எண்ணிடலாம் பேடி-வந்தால்
பிடர்பிடித்தே உலுக்கிடுவோம் கூடி!



# கொசு

அற்பமாய் எண்ணு வீர்கள்
அடித்தெமைக் கொல்லு வீர்கள்
உற்பவ முன்னா லென்றே
ஒழிக்கவும் திட்டங் காண்பீர்
நற்பெய ரில்லை, நோயின்
நண்பனாம் என்னால் தொல்லை
வெற்பள வென்ப தாலே
வேட்டைநான் மாந்த ருக்கே!

ஏழ்மையின் கரணி யந்தான்
எதுவெனத் தேரா மாந்தர்
வாழ்விடம் குப்பம், எம்மை
வளர்த்திடும் பண்ணை, ஊருள்
தாழ்நிலம் தொழுவம், குப்பை
தடைபடும் கழிவு வாய்க்கால்
வாழ்விட மாகி எம்மை
வளர்ப்பவை உண்மை தானே?

போர்முனை வான வூர்தி
பொலிவுடை வடிவ மேனி
கார்நிற முள்நேர் வாயால்
கடித்துடன் வீங்கச் செய்வேன்,
வேர்தரும் வெள்ளைப் பூண்டின்
வெளிப்புறத் தோலி றக்கை
நேர்பட இசைக்கக் கேட்டால்
நெறிப்பதேன் நெற்றி தன்னை?

என்னையே நம்பி யின்றும்
எத்தனை நிறுவ னங்கள்?
என்பேர் கூறிக் கொண்டிங்
கெத்தனை விளம்ப ரங்கள்?
அன்னிய ராட்சி போலே
அடித்தெமை விரட்ட நீங்கள்
என்னதான் முயன்ற போதும்
எங்குலம் வளரு தென்னே!

விண்ணையும் வெற்றி கண்டு
வெண்ணிலா முடிமி தித்தே
மண்ணுளே விஞ்ஞா னத்தின்
மாண்பினை வளர்த்தும் என்னே?
எண்ணிலா மருந்து கண்டே
எப்படிப் போரிட் டாலும்
கண்ணெதிர் பறக்கும் தீமை
கண்டெமை வென்றீ ரில்லை.

அரசியல் ஆதா யத்தை
அடிமனம் ஊக்க, ஊரில்
உரசலை உண்டு பண்ண
உதவிடும் சாதி போன்றே
பரவிடும் நோயின் மூலம்
'பாவி' யாம்! இல்லார்க் கெல்லாம்
இரவெலாம் எம்மால் தொல்லை;
என்வழி நன்மை இல்லை!

காய்கதிர் வெளிச்சம், வெப்பம்
காசினி புரக்கும், எங்கள்
நோய்ப்பணி முடங்கச் செய்தே
நொறுக்கிடும் நோய்மூ லத்தை?
ஏய்ப்பரின் மருந்தா லெம்மின்
இனத்தினை ஒழிப்ப தெங்கே?
தூய்மையாய் வீடி ருந்தால்
தொல்லையைக் குறைப்போம் கண்டீர்!

தூயநல் லெண்ணம் தொண்டர்
தொழுதிடும் துணைப்பண் பாகும்
ஆயநற் கல்வி ஆன்றோர்
அறிவொளி ஆக்க மாகும்!
வாயதே ஊசி யாக
வலிதரக் குத்தி நோயின்
தாயராம் உயிரித் தூதெம்
தகுதுணை இருட்டாம் கண்டீர்!

உயிரி = பாக்டீரியா

# முந்நீர்

பஞ்சுபொதி ஒத்தநுரை அள்ளி - அலை
பந்தெனவே பாய்ந்துவரும் துள்ளி - கரை
நெஞ்சுநெகி ழாதெதிர்க்க
நீண்டபகை வென்றொடுக்க
ஆர்க்கும் - துணை
சேர்க்கும்.

ஏழுவண்ண வில்வளைத்துக் காட்டும் - கடல்
எந்திரம்போல் பேரிரைச்சல் கூட்டும் - உயிர்
வாழுதற்கே வாய்த்தமடி
வாழ்த்துமுயிர் கோடியடி
என்னும் - புகழ்
மன்னும்.

ஊருலக வண்டலெலாம் வாங்கி - கடல்
உண்டதனால் உள்ளதுப்பு தேங்கி - கலன்
ஏருழவு செய்வதுபோல்
ஏறியுடல் கீறுகையில்
கொதிக்கும் - அலை
குதிக்கும்.

எத்தனையோ நன்மையிதால் உண்டு - தினம்
ஈந்துவக்கும் பாரிமனம் கொண்டு - எழில்
வித்துருமம் முத்துநகை
விஞ்சுசுவை உப்புதனை
நல்கும் - நலன்
பல்கும்.

காதல்



# கல்லின் மேல் எழுத்து

கண்களைக் கொண்டே என்னுள்
காதலைப் பற்ற வைத்தாய்
தண்ணொளி முகத்தைக் காட்டித்
தவிப்பினைத் தூண்டி விட்டாய்
புண்ணிலும் இன்பங் காணும்
புதுமையை நீதான் செய்தாய்
மண்ணுளே யுன்னை நீக்கி
மற்றவை இருண்ட தென்னே!

அடைவதென் நோக்கம், உன்னை
அடைத்திட வளர்ந்த தூக்கம்
படையெதிர் வந்த போதும்
பார்வையில் படுமுன் தோற்றம்!
குடையினால் வெப்பம் வெல்லும்
குறியினால் எதிர்ப்பை வெல்வேன்
அடைநற வன்பே! நெஞ்ச
அரங்கமோ உனக்கு மட்டில்.

எதிர்ப்படும் நிலவே! அங்கை
ஏந்திய மலரே! காதல்
உதிர்த்திடும் பழுப்பா? இல்லை
ஊன்றிய எண்ண வேர்கள்!
கதிர்தொடும் முளரி யன்னக்
கண்களில் ஊற்றேன் வைத்தாய்?
விதிர்த்திடல் வேண்டா, என்னை
வெல்பவர் நிலத்தி லில்லை!

நிழலையார் அள்ளிச் செல்வார்?
நினைவையார் கொள்ளை கொள்வார்?
அழலையா மடியில் வைப்பார்?
அணியையா புடைத்துப் பார்ப்பார்?
வழலையாய் வாழ்ந்து தேய்வோர்
வரிசையில் எனைத்தே டாதே
மழலையின் சிரிப்பே! வெப்ப
மழையினால் அருவி வேண்டாம்!

வழலை = சோப்பு

காட்சியைத் தாண்டிச் சென்றே
கருத்தினால் கண்ட சீர்மை
மாட்சியை அன்பை வார்த்து
மனத்துளே வளர்த்து விட்டேன்
காட்சியாய் மாறாக் காதல்
கலையென வாழச் செய்வோம்
ஆட்சியைப் பிடிப்பார் போலே
ஆற்றலால் அறிவால் வெல்வோம்!

மண்ணடி வெப்பம் போலே
மனத்தழல் மூட்டி விட்டாய்
வெண்மணல் ஆற்றின் ஊற்றாய்
வியர்வையைச் சுரக்க வைத்தாய்
ஒண்மலர் நாற்றம் போலே
உயிருடன் கலந்து விட்டாய்
கண்ணொளி நீயில் லாமல்
காட்சிநான் காண்ப தேது?

# நெஞ்சே!

நெஞ்சம் உன்னைத் தீண்டத் துடித்தது
நிற்க வில்லை நேற்றுப் படித்தது!
விஞ்சும் ஆர்வில் குறையும் பிடித்தது
விலகிச் சென்றாய் உள்ளம் வெடித்தது!

கண்களில் ஆயிரம் கவிதை படித்தேன்
காணும் போதோ மகிழ்வில் தடித்தேன்
விண்ணிலா மண்ணிலா! எனநான் துடித்தேன்
விடும்சொல் படித்தேன்! விரும்பிக் குடித்தேன்!

காணா வேளை கவலை பிறந்தது
கண்ட போதோ உலகே மறைந்தது!
ஆணாய்ப் பிறந்த அவலம் தெரிந்தது
அகத்தி லுன்றன் அழகே நிறைந்தது!

உலகம் என்பதே உன்னுரு தானா?
உய்யும் நிலைநான் எய்திடு வேனா?
பலவும் கற்றிடும் பருவம் வீணா?
பலியாய் ஆகப் பிறந்தவன் நானா?

பிறவிப் பயனாய் நீயெனக் கானாய்
பித்த னாக்கிப் பிரிந்தே போனாய்
உறக்கம் கெட்டும் உழன்றேன் ஊனாய்
ஒருசொல் லுதிர்த்தால் உயர்வேன் தூணாய்!

உன்னை மட்டில் உளமேன் தேடுது!
உருவம் கண்ணுள் நின்றேன் ஆடுது?
இன்னலைத் தொடர்ந்தே ஏனதும் ஓடுது?
இதனை அறியா தென்மனம் வாடுது!

காதல் என்பதன் பொருள்நா னறியேன்
கைவிடத் துணிந்தால் உயிர்நான் தரியேன்
ஆதர வளிநீ அறப்பிழை புரியேன்
அகத்தில் இடமளி அரைநொடி பிரியேன்!

என்ன காரணம் உன்னை வியக்க?
எதுவுன் கருவி என்னை மயக்க?
உன்னித் தெளிய உதவி பயக்க
உறுவழி யறியேன் உடனே இயக்க!

இன்னும் என்ன உறுதி வேண்டும்?
இருப்ப தோருயிர் அதுவா வேண்டும்?
மன்னும் காதல் மலர்ந்திட வேண்டும்
மருந்தே! நீமனம் திறந்திட வேண்டும்!

# இளமை நினைவுகள்

புள்ளிவைத்துக் கோலம் போட்டாள்;
பூமி வானம் ஆனது!
வெள்ளிமீனும் வெண்ணி லாவும்
வெட்கப் பட்டுப் போனது!

இடையில்பாரம் ஏறும் போது
இளைய கொடியும் வாடுது!
நடைபயிலும் அழகைக் கண்டு
நயனம் கவிதை பாடுது!

பந்தெடுத்து ஆடும் போது
பார்வை பின்னே ஓடுது!
எந்திரத்தின் விசையைப் போலே
எண்ண வேகம் கூடுது!

நாணிமுகம் கவிழ்ந்து விட்டால்
நாளும் இரவா யாகுது
காணிவிற்ற உழவ னாகக்
கவலை வந்து சூழுது!

கணினியாக்க ஓவி யத்தைக்
கனவுச் சட்டம் தேடுது
மணிமணியாய்க் கற்ப னைகள்
மயக்க மூட்டி ஆர்க்குது!



# வற்றுதே பொன்னி

கண்கள் தளத்திலே நீர்வாயுக் குண்டு
கண்டு கலங்குதே கரிசனம் கொண்டு!
பெண்ணாய்ப் பிறந்தவர் பேதுறக் கண்டு
பேசா திருந்திடும் ஆண்களு முண்டு!

நெஞ்சைத் துளைத்திடும் நேத்திரக் குண்டு
நேயம் வளர்த்திடும் புன்னகை கண்டு
பஞ்சு நிகர்த்தவர் பார்த்துமி ரண்டு
பந்தம் அறுமெனச் சொன்னது முண்டு!

கம்பியில் பாயும் மின்திறன் போலே
கன்னியர் கற்ற கலைத்திறத் தாலே
தும்பிநேர் நெஞ்சம் தோற்பத னாலே
தூற்றுவ தாமோ காழ்ப்புணர் வாலே!

தக்கை நெஞ்சுடை ஆண்களின் ஆசை
தாளம் தப்பிய தண்டமி ழோசை!
சுக்கு மிளகெனப் பெண்களை எண்ணிச்
சொல்லால் சுடுவதால் வற்றுதே பொன்னி!

## செய்தியில் நெய்தவை

# வேளாண் விஞ்ஞானிக்கு விருது



வீதிகளில் வெறும்பேச்சை விதைப்பார் தம்மை
வேடிக்கைப் பார்க்கும்நாம் புகழ்வோம், வேண்டா
சாதியெனும் நச்சரவு பண்ணைத் தேடிச்
சத்துணவு முட்டையென வாங்கச் செல்வோம்!
வேதியர்கள் சிலர்கூடி ஓதி நின்றால்
விளங்காமல் மெய்மறப்போம், ஆனால் சான்றோர்
நீதிமுறை ஆதிமுறை நெறியைச் சொன்னால்
நிற்காமல் நடைமுடுக்கி ஓடிப் போவோம்.

அறிவியலால் நமையுயர்த்தும் ஆன்றோ ரிங்கே
அற்றுவிட வில்லைபலர் உள்ளார், ஆனால்
வறியரின்கை யகப்பட்ட வைரம் போலும்
வன்மையிலார் ஏந்தியுள வாளைப் போலும்
பொறியொன்றும் தீண்டாத பூவாக் கிட்டோம்
போற்றாம லொதுக்கிட்டோம்; சுவாமி நாத
அறிஞரைப்போல் எத்தனைப்பே ரிந்த நாட்டில்!
அறிந்தாரா அவர்பெருமை அனைத்து மக்கள்?

வேளாண்மை வியன்கலையின் நுட்பங் கண்டார்
வெற்றிதரும் விளைவுக்கு மூல மானார்
காளான்கள் தமைப்புகழ, வாழ்த்துக் கூறக்
கற்றுள்ளோம், களம்புதுக்கும் விஞ்ஞா னிச்சொல்
கேளாத செவிபெற்றோம் மாணாக் கர்க்கும்
கிளத்தாது விட்டிட்டால் வளர்ச்சி எங்கே?
ஆளாத ஆயுதமாய் அறிவு மாறும்
அறிவியலார் ஆற்றலைநாம் போற்ற வேண்டும்!

உலகரங்கில் உயர்ந்துள்ளார் சுவாமி நாதன்
உண்டிங்கும் பாராட்டு மேல்மட் டத்தில்
நலம்விளங்க அவர்பெயரை நம்மூர் மக்கள்
நாவாரப் போற்றுவதே நன்றி யாகும்!
இலமிங்கே உண்ணுதற்கே உணவென் றேங்கும்
இரங்குநிலை தவிர்த்தவர்கள் இவரை யொத்தோர்
நிலமுழுது பயிர்ப்பயனைப் பெறுதற் கான
நேர்வழியைக் கண்டுரைத்தார் சுவாமி நாதன்.

எத்தனையோ விருதிவர்க்கே, இவர்பேர் தாங்கி
இயங்குமறக் கட்டளையு முண்டே, அன்னார்
தத்தெடுத்தே ஆய்ந்திட்ட விஞ்ஞா னத்தால்
தந்தபலன் தான்பசுமைப் புரட்சி என்றே
தித்திக்க திலகரறக் கட்ட ளையார்
தேர்ந்துவிரு தளிக்கின்றார்; தேயத் தாரின்
சித்தமெலாம் தேன்பாயும் செய்தி! நாமும்
சேர்ந்திவரை வாழ்த்திடுவோம் சிறக்க நீடே!

லோக மாணிய திலகர் விருது 2001-ஆம் ஆண்டுக்கு, இந்தியாவில் பசுமைப்புரட்சியின் போது வேளாண் விஞ்ஞானி முனைவர் எம்.எஸ்.சுவாமிநாதன் ஆற்றிய பணிக்காக இவருக்கு வழங்கப்பட்டது.



# கார்கில் மறவர்

தந்தைபெரி யார்வங்கத் தாகூர் அரவிந்தர்
சிந்தைவளத் தாடி சிலிர்த்தே நிமிர்ந்தேகி
கார்கில் மலைமுகடாய்க் காட்சிதரக் கைப்பற்றப்
போர்முனையில் நின்றெதிர்க்கப் போக்கற்ற பாக்கித்தான்
கள்ள வழிநுழைந்தே கைவரிசைக் காட்டியதைக்
கொள்ளிமுன் தேனீ கொடுக்காக்கிப் போடுதற்கே
நம்மின் படைவீரர் நல்லுயிரைத் தந்துள்ளார்
அம்ம! அவரீகம் ஆயிரம் வெள்ளிமலை!
வீரம் விளைத்துயிரை வெற்றிக்கென் றீந்தாரை
ஈர இதயத்தில் ஏற்றி வணங்கிடுவோம்!
தாய்நாட்டின் மானத்தைத் தம்முயிரால் மீட்டவர்கள்
வாய்மைபோல் நின்று வரலாற்றில் வாழ்கின்றார்!
நாளுந மிறப்பவர்கள் நம்மில் பலருண்டு
நீளுந மகவை நிலைகெட்டுப் போவதுண்டு
ஈட்டும் பொருளும் ஈன்றெடுத்த பிள்ளைகளும்
காட்டிற்குப் போம்வரையில் கையிருப்பு, மெய்யிருப்பு!
என்னே சிலர்க்கிவையும் இன்ன லிழைப்பதுண்டு
சின்ன மனத்தாலும் சீரழிந்து போவதுண்டு!
நாட்டிற் குழைத்தற்கே வீட்டைத் துறந்தேகி
ஏட்டில் நிலைத்தோர்க் கிறப்பும் பெருஞ்சிறப்பே!
காமம், அழுக்காறு, காசு; பதவியெனும்
ஏமம் கருதி இனமழிப்பார் தம்மையெலாம்
வீரர் எனப்போமா? வெற்றி அவர்க்காமா?
சூரர் களப்போரில் சொட்டும் அரத்தந்தான்
அந்திக் கதிருக்கே ஆடையென ஆகிறது!
முந்தியெழும் காலை முகப்பூச்சாய்த் தோய்கிறது!
நாட்டிற் குழைத்தாரை நாம்மறக்கக் கூடாது
வீட்டிற் கவரே விளக்கு!

# அகழ்ந்ததால் அதிர்ந்ததோ?

குடியரசுப் பொன்விழவைக்
கொண்டாடும் நேரத்தில்
குலுங்கியது குசராத்து மாநிலம்!
அடியற்ற நெடுமரமாய்
ஆகியதே பூஜ்நகரம்
அழுததடா அழிவறிந்த நானிலம்!

கம்பிகட்டுத் தளங்களெலாம்
காலிடிந்து வீழ்ந்ததடா
கதறிமாண்ட மக்கள்பல் லாயிரம்!
நம்பிநிற்கச் சுற்றமின்றி
நாளைக்கெனும் சொத்துமின்றி
நடுத்தெருவில் நின்றார்நூ றாயிரம்!

கட்டிவாழ்ந்த இல்லங்களே
கல்லறையாய் ஆனதனால்
கண்கலங்கிக் கைப்பிசைந்தார் லக்கம்! (லட்சம்)
கொட்டிவைத்த கூலமாகக்
குடியிருப்பைக் கண்டவர்கள்
குமுறுகிறார் நாமிருப்போம் பக்கம்!

ஏதிலியாய் ஆனவர்க்கே
இரங்கவேண்டும் நாமவர்க்கே
இயன்றதெல்லாம் ஈந்தவரைத் தேற்றுவோம்!
நாதியற்றோர் மீள்வதற்கு
நாகரீகம் வாழ்வதற்கு
நாம்கிளையாய் ஆகித்துயர் மாற்றுவோம்!

இருபத்தைந் தாயிரமாம்
இவ்வளவும் கோடிகளாம்
இழப்பளவோ இமயத்தின் மேலே!
இருசுடரே உலகளக்கும்
இருளகற்றும் தன்மையிலே
எழுந்துதவு இன்னலெலாம் தூளே!

பலநூறு முறைநடுங்கிப்
பாச்சா,பூஜ்; அஞ்சாரைப்
பலிவாங்கி விட்டதுநம் பூமி!
இலமென்னும் துயரவர்க்கிங்
கிருக்குமெனில் நாமெதற்காம்?
என்றெழுந்து வந்ததுயிர்ச் சாமி!

வந்தது + உயிர்ச்சாமி = உயிறுள்ள கடவுளான உயிரிரக்க மாந்தன்.

மாந்தநேயம் மலர்ந்ததந்நாள்
மதவுணர்வு தளர்ந்ததிந்நாள்
மடியவிழ்த்து நிதிகொடுத்தோர் கோடி!
பாந்தமோடு ‘பாக்கு’கூடப்
பரிந்துதவ வந்ததெண்ணிப்
பதுங்கிவிட்ட தன்றுபகை ஓடி!

# தகர்ந்தது தலிபான் மாண்பு



(ஆப்கானிஸ்தான் தலிபான் அரசின் தலைவர் முல்லா முகம்மது ஒமார் ஆணையால்; 1800 ஆண்டுக்கு முன் இந்துகுஷ் மலையைக் குடைந்து செதுக்கிய 150 அடி, 180 அடி உயர புத்தர் சிலைகள் மார்ச் 2001-ல் தகர்க்கப்பட்டன. உலக நாடுகளின் விண்ணப்பங்களையும் புறந்தள்ளி இக்கொடுமையைச் செய்தனர். இவற்றோடு பிற சிலைகளையும் தகர்க்க முனைந்துள்ள மாந்த நாகரிகத்தை மீறிய செயலை உலகம் கண்டித்தது. நமது உணர்வின் வெளிப்பாடு இது)

நிலவொளியின் தாக்கத்தால் நரியுங் கூட
  நீள்குரலில் ஊளையிடும், நெடுவா ளேந்தும்
நிலப்படையை அச்சுறுத்தும் ஆற்றல் பெற்றே
  நெளிகின்ற நச்சரவும் மகுடிக் காடும்!
புலம்பெயராச் செடிகொடியும் இசையைத் துய்க்கும்
  புதுமையென நாய்பூனை கூடப் பாடும்
விலங்கிவைக்கும் கீழானார் ஓமர் தொன்மை
  வியன்கலையைத் தகர்த்தின்றே பழியைத் தொட்டார்.

இடிப்பதையும் சிதைப்பதையும் இறைத்தொண் டாக
எண்ணுகின்ற இருள்மனங்கள் இங்கு முண்டு
வடித்தளித்த குர்ஆனில் நிறுத்தி வைத்த
வரிக்கருத்தைத் தேராத தலிபான் மாக்கள்
இடித்துள்ளார் அறிவுருவை; தொன்மை மிக்க
இருபெரிய புத்தருருச் சிலையை, பட்டைக்
கடிக்கின்ற எலியிவர்கள் இசுலாம் மாண்பைக்
கறையாக்கிக் கரிமுகத்தில் பூசிக் கொண்டார்.

"கரத்தாலோ, கருத்தாலோ மாற்றார் நெஞ்சுள்
காயத்தைச் செய்யாரே முசுலிம்" - என்றே
தரமான கருத்தாளர் நபிகள் சொன்னார்
தலிபான்கள் இசுலாத்தைக் கற்றார் தாமா?
உரமான உடலாலே உழைப்பே வேண்டும்
உளவுயர்வாம் ஈரமிலார் மாந்த ரன்றே!
அரசிவர்கள் கைவந்தே ஆப்கன் சீர்மை
அழித்ததுடன் அகிலத்தைக் கொதிக்க வைத்தார்.

பன்னூராண் டாண்டவர்கள் பாது காத்த
பழஞ்சிலையைக் கலையுருவைப் பாழ்ப டுத்தித்
தன்னாட்டைக் காடாக்கித் தாழ்த்திக் கொண்டு
தலிபானே அவமானச் சின்ன மாச்சே!
வன்மீகம் வாழுயிரா மதத்தைக் காக்கும்?
வடித்தகலை இடிப்பதுதான் இறைத்தொண் டாமா?
முன்னோரின் நினைவழிப்பார் மூடர், அன்னார்
முகங்காண நாணுதடா மாந்த நேயம்!

வன்மீகம் = கறையான் புற்று.

தலிபானின் தலைமுல்லா முகம்ம தோமர்
தகர்ப்பாணை யாலிந்து குஷ்ம லையில்
பொலிவாக மலைகுடைந்தே செதுக்கி வைத்த
புத்தபிரான் உருச்சிலைமேல் போர்தொ டுத்து
மலிவான மனப்போக்கால் தகர்த்தே விட்டார்
மடிந்ததிரு ஆயிரமாண் டகவைச் சின்னம்!
புலிபிணத்தைத் தின்னாது, பூனை முள்ளைப்
பொறுக்கிற்று, புந்தியிலே புண்சீழ் நாற்றம்!

ஒப்பாரிப் பாட்டிலெவர் நயம்பார்ப் பார்கள்?
ஒழிபியலை எவர்முனைந்து முதலில் கற்பார்?
இப்பாரின் நெடுஞ்சிலையை இடித்தார் தம்மை
இயல்மனத்தர் வியப்பாரா? இடித்துக் காட்டிச்
சப்பாணிக் கொட்டவைத்தார்; சால்பு விட்டோர்
சந்தனமாய் நாற்றத்தைப் பூசிக் கொண்டார்
குப்பாயம் அணிவதற்கே ஆசைப் பட்டோர்
கோவணமும் இல்லாத கோலங் கொண்டார்.



# மழை மேகம்

ஏழ்மைக் கொருநாடே இந்தியா என்றிருந்த
தாழ்வைத் தகர்த்துத் தலைநிமிரச் செய்தற்கு
விஞ்ஞான ஒப்புரிமை வேர்பிடித்த நற்கொள்கை
எஞ்ஞான்றும் நின்றிலங்க ஏற்பாய் வினைமுடித்த
நேரு பெருமகனார் நெஞ்சுயர்வை நாம்வியப்போம்!
ஏரும் எருவுமென இந்நாட்டிற் கானவரால்
கொள்கைக் குறுக்கத்தைக் கொண்டாடா மேலவரால்
தள்ளா தறிவியலைத் தாங்கி வளர்த்தவரால்
பாரதத் தேரோட்டம் பார்க்க எழிலாச்சு;
பாரதத்தின் முன்னேற்றம் பண்டே பதிவாச்சு!
பஞ்சம் உணவுக்கு! பட்டினியால் மக்களெலாம்
நெஞ்சம் நெகிழ்ந்து நிலைகெட்ட நேரத்தில்
ஓங்குதொழில் நாட்டத்தால் உற்றபிழை ஈதென்றே
பாங்கறிந்தோன் நெஞ்சத்தில் பட்டறிவு ஊன்றியது!
காடு விளைந்தால்தான் ஓடுமிந்தப் பஞ்சமெனப்
பீடுபெறு மாற்றலுடன் பின்புலமு முள்ளவரைத்
தேடுகையில் பண்டிதர்முன் தீர்வாகத் தென்பாட்டார்
நீடுபுகழ் வேளாளர்; நெஞ்சமுழக் கில்லாதார்!
பாரத ரத்தினமாய்ப் பார்கண்ட சி.சு.தான்
ஊரகத்தை முன்னேற்ற ஊனப் பழமைதனைத்
தூக்கி எறிந்துவிட்டுத் தேக்கு புதுமையென்றார்!
ஊக்கும் புதுக்கருவி, ஊட்டவிதை; மாற்றுரங்கள்
எட்டுத் திசையிருந்தும் ஈண்டுக் கொணர்ந்திட்டார்!
பட்டு மடிந்ததடா பஞ்சம் பசியிரண்டும்!
பற்றாக் குறைபோக்கிப் பாரதத்தைக் கேளென்னும்
பெற்றி தருவித்தார் பேராளர் சி.சு.வே!

நாட்டின் விடுதலையில் நாட்டமிவர் கொண்டதனால்
ஏட்டில் புதையா திணைந்தா ரியக்கத்தில்!
பட்டம் பதவிபல பாங்கறிந்து வந்தே;கை
கட்டியிவர் பால்நின்ற காட்சிதனை நாடறியும்
பத்தாண்டு மத்தியிலே பாராண்ட நல்லமைச்சர்
இத்திக்கில் யாரென்றால் இன்றுமிவர் மட்டுந்தான்!
ஆளுந ராயிருந்த அந்திப் பொறுப்போடு
நீளும் அரசியலை நீங்கித் தனித்திருந்தார்!

மாட்சி தமிழுக்கு மாணாக்கர் சி.சு.தான்
ஆட்சிமொழிச் சட்டத்தை ஆக்கிக் கொடுத்திட்டார்!
நேர்மை அரசியலை நீந்திக் கரைசேர்ந்தும்
ஆர்வங் குறையாமல் ஆனநெறி காட்டிவந்தார்!
மண்டிவிட்ட ஊழலினைக் குண்டெறிந்து தாக்கென்ற
தொண்டு கிழவரவர் தொண்ணூற்றைத் தாண்டும்முன்
காத்திருந்த சாவுவந்து கைப்பற்றிக் கொண்டதந்தோ!
நாத்திறத்தின் மேலாக நாணயத்தால் வாழ்ந்தவரை
இல்லாமற் செய்திடவே எச்சக்தி எங்குளதாம்?
வல்லார்நம் சி.சு.வால் வாய்த்த வள,நலங்கள்
வாழத்தி வணங்காதா? வாழ்வாங்கு வாழ்ந்தவர்பால்
தாழ்த்துங் குறையில்லை, தாண்டிட்டார் பேரெல்லை!

ஈரா யிரத்தாண்டின் ஈர நவம்பரிலே
சாராத் 'தனி' ஏழில் சான்றோருள் மூத்தாரின்
ஓயா இதயந்தான் ஓய்வெடுத்துக் கொண்டதம்மா!
சாயாத நேர்மை சரித்திரமாய் ஆனதம்மா!
புத்தா யிரமாண்டும் போற்றற் குரியவரைக்
கொத்தாய்ப் பறிகொடுத்துக் குன்றிப் பிறந்ததம்மா!
பேராய மென்கின்ற பேராழி நித்திலத்தை
ஈரா யிரத்தாண்டும் ஏந்தி மறைந்ததம்மா!
நல்லா ரொருவரையிந் நாடிழந்த தென்பதன்றி
இல்லையவர்க் கென்றும் இறப்பு.

# அரிவையர் பெற்றனர் அறிவியல் விருது

பின்புலமாய்ப் பெண்ணினத்தைக் கொண்டன் னாரின்
பேருழைப்பால் வெற்றிதனைத் துய்த்துக் கொண்டே
என்றென்றும் எடுபிடியாய் இருக்கச் செய்ய
ஏராள புனைகதைகள் எழுதி வைத்தும்
தன்முனைப்பா லின்றவர்கள் தலைநி மிர்ந்தே
தகையணங்காய் மிளிர்கின்றார், தள்ளி வைத்த
வன்கலைகள் பயின்றதிலும் வரிசை பெற்றார்
வருங்காலம் அவர்கையில் மறக்க வேண்டாம்!

அடுப்படியே அவர்க்குரிய இடமென் றாக்கி
அறிவொளியை அணைத்திருந்த இருளைப் போக்கி
எடுப்பான காவலரின் உடைய ணிந்தே
ஏராக நடக்கின்றார், இனிது யர்ந்தே
மிடுக்காக வானூர்தி ஓட்டு கின்றார்
மெல்லியலார் வல்லுநராய் விளங்கு கின்றார்
தடுக்காமல் விட்டிருந்தால் தமிழப் பெண்கள்
தாமரையாய் மலர்ந்திருப்பார் முடக்கி விட்டோம்.

அறிவியலில் அவர்திறமை மெச்சி ஆள்வோர்
அளித்துள்ளார் விருதின்றே! ஆண்க ளுக்கே
குறிவைத்துக் கொடுத்திருந்த சிறப்பில் பங்கு
கொடுத்துள்ளார் பெண்களுக்கும்! குளிர்நி லாவை
அறியாதார் குருடர்தாம், ஆற்ற லுக்கேன்
ஆணெண்றும் பெண்ணென்றும் வேறு பாடு?
தறிதன்னைத் துரும்பென்றே எண்ணு வாரைத்
தழைச்செடியாய் ஓரத்தில் தள்ளி வைப்போம்!

தறி = தூண்

# மதம் இதுதான்!

பார்வைக் கதுவோ பழங்கலைக் கட்டடம்
நேர்மை நோக்கிலோ நினைவுச் சின்னம்
வேர்கொள் பிளவின் விளைச்சல் அறுவடை
பேர்வழிக் கெல்லாம் பிணக்கின் முகப்பாம்!

அறநெறி புகட்டும் அன்பின் வழியாய்
உறவை வளர்க்கும் உண்மை மதங்கள்!
மறந்திடக் கூடா மாந்தநே யத்தை
இறந்திடச் செய்ததே இடித்த இழிவினை!

வன்ம வளர்ப்பை வழிபா டென்பதும்
இன்னல் புரிதல் இறைபணி யாவதும்
இன்றெம் தலைமுறை எண்ணப் பிழையிதை
உன்னும் பொழுதே உயிர்மூச் சடங்கிடும்!

இடிந்த மசூதி எத்தனை? ஒன்றுதான்;
இடிந்த இதயம் எத்தனை கோடியோ?
இடிந்த திலைசுவர், இரக்கம் அன்பே!
இடிந்த திருமத இணக்கப் பாலமே!

அன்புதான் மதங்களின் அடிப்படைத் தத்துவம்
வன்முறை வளர்நெறி வாழ்த்துவ தெம்மதம்?
இன்னலை விதைத்தால் இன்பமா விளையும்?
தன்னலத் தருக்கர் தனிவழி மதமல!

அரசியல்

# தலைமைக் குத் தகுதி

உற்ற தொழிலை உதறித் தள்ளு
உறவே நீயென ஏழையைச் சொல்லு
வெற்றுப் பேச்சை விடாது மெல்லு
வெறுப்பைத் தூண்ட விரைவாய்க் கிள்ளு!

ஊழலை முதலில் உரக்கச் சாடு
உரிய நேரம் வந்ததும் கூடு
ஆழ நிலைக்க அடிக்கல் போடு
அழுத்திப் பேசிப் பிறரைச் சாடு!

சுற்றப் பற்றை விட்டதாய் நடி!
சொன்னதை மறக்கும் சூத்திரம் படி!
வெற்றி இலக்கை எட்டியே பிடி!
விழித்த ஆளை விடாதே அடி!

மானம் ஈனம் மறத்தல் நன்று
மரமாய் மாறு மானுடம் கொன்று
ஈனத் தனத்தால் இயன்றதை வென்று
ஈட்டு களிக்கும் இனமெதிர் நின்று!

வளரும் வரைவழி காட்டியைத் தேடு
வழிமுறை தெரிந்ததும் தலையில் போடு
தளர விடாமற் றொண்டனைப் பாடு
தப்ப முயன்றால் வழியை மூடு!

ஆடம் பரத்தை வெறுத்தல் போலே
ஆரம் பத்தில் நடிப்பத னாலே
மூடர் பெருகி முழங்குவ தாலே
முடியும் கொடியும் வரும்பின் னாலே!

மூட பக்தனை முன்னே நிறுத்து
முட்டாள் தனத்தின் அளவைப் பொறுத்து
ஆடவை அரங்கில்! அரும்பும் குருத்து
அதிகம் வளர்ந்தால் அடக்கு அறுத்து!

ஒழுக்கம் தன்னை உடைப்பில் போடு
உறவுக் கென்றால் உடனே ஓடு
பழுக்கு மென்றால் பல்லவி பாடு
பதவி பணத்தைத் தந்தால் கூடு!

சொத்தை நூறாய்ப் பெருக்கிக் கொள்ளு
சொல்வார் குறைகள் ஒதுக்கித் தள்ளு
நத்தும் சிலரை அணைத்துச் செல்லு
நம்பா தவரைச் சொல்லால் கொல்லு!

உன்னைச் சுற்றி வட்டம் போடு
உயர்த்த அதனுள் ஆளைத் தேடு
தன்னை இழத்தல் தொண்டன் பாடு
தலைவா! என்றுனை வாழ்த்தும் நாடு!

இதுவரை சொன்னவை இன்றுள நடைமுறை
இதன்படி வாழ்ந்தால் பழிதான் வழிமுறை
பொதுமறை நெறிசெல் பூவுல குளவரை
புகழும் நிலைக்கும் போம்,பார் பெருங்குறை!

# தமிழன் பெருமை . . ?

தமிழனென்று சொல்லடா!
தலைகவிழ்ந்து செல்லடா!
உமியை வாங்கி மணியை நல்கும்
உனைப்புகழும் உலகெலாம்!
உதறியோடும் நலமெலாம்!

வேட்டிசேலை தந்துவிட்டால்
வேண்டியவ ராகலாம்
கோட்டை நாட்டைக் கூடி யாரும்
கொள்ளையிட்டுப் போகலாம்!
கோடிஈச ராகலாம்!
மாட்டைஆட்டை மேய்த்தபடி
மகிழ்ந்துமக்கள் வாழலாம்
மற்ற தெல்லாம் மூன்று பேரே
மடியில்கட்டி ஆடலாம்
மாநிலத்தார் வாடலாம்!

நாளையென்ற நினைப்பிருந்தால்
நாடுவளம் பெற்றிடும்!
நமக்கெ தற்காம் அந்த எண்ணம்
நண்டுவளை தூர்ந்திடும்
நல்லறிவும் சோர்ந்திடும்!
ஆளைக்கண்டு, அழகைக்கண்டு
ஆளவாய்ப்பு நல்கலாம்
ஆளவந்து தொல்லை தந்தால்
அப்புறமே எள்ளலாம்!
அவலெடுத்து மெல்லலாம்!

நீண்டநோக்கும் நிலைத்தபோக்கும்
நீர்த்துவிட்ட இனமடா!
நெஞ்சு ரத்தில் பஞ்சம் வந்து
நிலைதிரிந்த மனமடா!
நிழல்கடிந்த குணமடா!
ஆண்டகால அவலமெல்லாம்
அப்படியே மறக்கலாம்!
அன்று என்ன கிடைக்கு மென்றே
ஆசைகொண்டே அலையலாம்
ஆண்மைகெட்டுத் தொலையலாம்!

மொழியுணர்வை அழிப்பதற்கே
மூளைச்சலவை செய்யலாம்
கழிவுதம்மை வாங்கி வந்து
கணக்கெடுத்துக் களிக்கலாம்
கைக்கமுகம் சுளிக்கலாம்!
பழியிதென்றும் இழிவிதென்றும்
பதைத்தகாலம் போச்சுதே
ஓழியிலே ஒட்டு மொத்த
இலக்கணமாய் ஆச்சுதே!
இனியும்தொடரும் பேச்சிதே!

மேளதாளத் தோடுகேட்டை
முன்னரேகி அழைத்திடும்
ஆளவாங்க என்று கெஞ்சி
அன்னியர்க்கே உழைத்திடும்!
அடிமையாகிப் பிழைத்திடும்!

கோளரங்கக் கோவைத்தள்ளிக்
குஞ்சுமீனை வாழ்த்திடும்
குணநலத்தைப் பேணுவாரைக்
குழிபறித்து வீழ்த்திடும்!
கொடுமையிலும் ஆழ்த்திடும்!

மானஈன மாண்பிவற்றை
மறந்தடிமை ஆகிடும்
மனசுக்குள்ளே ஆசைவந்தால்
மற்றதெல்லாம் ஏகிடும்!
உற்றதெல்லாம் ஓடிடும்!
தேனடையைத் தந்துவிட்டுத்
தேடிவறட்டி வாங்கிடும்
தேவையதே என்றுபேசித்
தேர்தலிலும் வாக்கிடும்
தெளிவறிவைப் போக்கிடும்!

கட்சிநலன் என்றுபார்த்துக்
காட்சித்திரை மாற்றிடும்
கழுதைகட்கும் சேணம்பூட்டிக்
கவலைமறைத்து ஓட்டிடும்
கரவுவஞ்சம் ஊட்டிடும்!
உட்பகையால் வெளிப்பகையை
உறவுகொண்டு ஊக்கிடும்
ஓதிவந்த கொள்கைதன்னை
ஓரங்கட்டி நீக்கிடும்
நேரம்வந்தால் தூக்கிடும்



# பூனைப் பண்பு

முழங்கிய சீய மின்று
முதுமையைத் தொட்ட தென்று
பழங்கலப் பூனை கண்டு
பகடிதான் செய்யு தின்று!

உறியிலே வைத்த நெய்யை
உருட்டியே நக்கும் பூனை
பறியிலும் பார்வை வைத்துப்
பதுங்குது பாயப் பாரீர்

எலிகளால் தொல்லை என்றே
எழிலுரு பூனைக்(கு) ஊட்ட
பலியெனக் கோழிக் குஞ்சைப்
பதறிடப் பற்றிற் றந்தோ!

புலியினம் பாரீ ரென்றே
புகழ்ந்தவர் தம்மேல் பாய்ந்தே
வலியுகிர் ஊன்றி ரத்தம்
வழிந்திட நக்கக் கண்டோம்.

நயமுடன் நாய்வால் ஆட்டி
நமக்கது நன்றி காட்டும்
பயப்பட வாலை ஆட்டிப்
பழுதுறப் பாயும் பூனை.

(நாய் வாலை ஆட்டினால் அது நன்றி.
பூனை வாலை ஆட்டினால் அது பகை)

# நீ நீயேதான்

தலைமைக்கு மதிப்புக் கொடு;
தவறுசிறி தென்றால் விடு!
நிலைமாறின் வைமுதற் கெடு;
நீளுமெனில் வினாவைத் தொடு!

கொள்கை பிறழாதே செல்;
குறுக்கீ டுறழ்ந்தாலும் வல்!
உள்ளும் புறமொன்றாய் நில்;
உன்பகை வெல்லாத புல்!

ஏவப் படுமுயிர் நீயா?
ஏனெதற் கென்றிடா நாயா?
ஆவல் கிழிந்திடும் பாயா?
அட,நீ அணைந்திடுந் தீயா?

வாழ்த்திடும் உன்னையும் நாடு;
வயப்படு பகுத்தறி வோடு!
வீழ்த்திடு மதமெனும் கேடு;
விலக்கிவை வேர்விடும் பீடு!

ஏற்ற தலைமைசெய் குற்றம்
எல்லாம் சரியெனும் சுற்றம்!
போற்று நலவினை மட்டும்
புழுதி படிந்திடில் தட்டும்!




# வாக்காளரே! வாக்காளரே!!

அற்றை வேந்தர் அழுக்கா றாலே
சுற்றம் பகைக்கச் சூழ்ந்த ஆரியம்
வென்ற செய்தியோ வீழ்ச்சிக் காதை!
இன்றது மீண்டும் எழுந்த திங்கே!
காட்சி அமைப்பில் கருத்தைச் செலுத்தி
மீட்சிக் குழைத்த மேதைக ளுழைப்பை
மாற்றா ரடியில் மலராய் வைத்துப்
போற்றும் நிலையில் புதுமை கண்டோம்!
நான்கு காலிகள்! நாற்கா லிக்கே
தேன்குட ஈயாய்த் திரிதல் கண்டோம்!
தொண்டர் மதியில் தூசு படிந்தால்
குண்டர் சொல்லே குறளுரை யாகும்!
ஏன்?எதற் கென்றே எதிர்த்துக் கேளா
ஆன்ம நேயமே அரசியல் பழுது!
யானை மதமாய் ஞானம் திரிந்தால்
பானையில் ஒட்டப் பருக்கை இராது!
மாற்றிடக் கரணியம் காட்டெனக் கேளார்
ஊற்றிலாக் கேணி! ஊறுதான் விளைவாம்!
எண்ணிச் செய்யா வினையால்
கண்ணீர், கவலை கைமேல் பலனே!



# சிவனார் சிந்திக்க

தன்னலத்தால் பொதுநலத்தை விழுங்கிக் கொண்டு
தலைவனெனத் திரிவாரை நம்பும் போக்கில்
சொன்னலத்தில் பகுத்தறிவைக் கரைப்போ ரின்று
சுழல்நீரில் குளிக்கின்றார் மதர்ப்பாய் நின்று!
கன்னத்தில் படிந்துள்ள கறையைக் காணக்
கண்ணாடித் துணைவேண்டும் என்றாற் போலே
இன்னலுறும் ஏழைகளை இனிப்புச் சொல்லால்
ஏய்ப்பாரை இனங்கான அறிவே வேண்டும்!

நெல்லுக்குள் மணியிருக்கும், நெற்றுத் தென்னை
நிழலுக்குள் குளிரிருக்கும்; ஆனால் வாய்க்கால்
புல்லுக்குள், புற்றுக்குள் புதையல் தேடும்
புரைமதிக்குள் பேராசை புரண்டி ருக்கும்!
அல்லுக்குள் அடங்கிவிடும் இயக்கம் போலே
அரசியல்சீர் கலைவாரின் ஆற்ற லுள்ளே
இல்லுக்கே வளம்சேர்க்கும் முதன்மை எண்ணம்
இருக்குமதில் ஏழையெனும் ஏய்ப்பி ருக்கும்!

கோடிமக்கள் கொண்டாடி வாக்க ளித்தே
கொடுக்கின்ற பதவியினால் தான்,தம் மென்றே
கூடிசிலர் நலன்துய்ப்ப தன்றி, ஊரார்
கொண்டாடும் வினைநாட்டம் கொள்ள மாட்டார்!
நாடிவரும் சிலருக்கு நன்மை செய்து
நலப்பயனில் பங்குபெறல் தொண்டென் றாமா?
காடியிலே விழுந்திறக்கும் பல்லி போலே
கருத்தழிந்து கயமைதனை ஊக்க லாமா?

ஊராளும் நாடாளும் உரிமை யெல்லாம்
உன்னாலே பெற்றதெனும் உண்மை தன்னைப்
பாராளும் பதவிகளாம் பழத்தைத் தின்னும்
பலர்மறந்து விடுகின்றார்! வாக்க ளித்தே
வாராத வாழ்வர்க்கு வாய்க்கச் செய்த
வழிமுறையைத் தேராமல், வளம்பெற் றாரைச்
சீரார்ந்த சொல்லெடுத்துச் சேவிக் கின்றீர்
செய்ந்நன்றி கொன்றாரை ஏற்று கின்றீர்!

முத்திரையைக் குத்தியபின் மன்னா! உன்றன்
முடியிறங்கி அவரடியில் கிடக்கும், உம்மை
நத்திவந்து நயந்தொழுகித் தொழுதோ ரெல்லாம்
நடைபயில்வார் நம்தலைமேல், தேர்தல் கூரை
உத்திரமாய் நீயிருந்த நிலைமை மாறி
ஒட்டடையாய் நீயெண்ணப் படுவாய்! வென்றார்
நித்திரையில் ஆழ்ந்திருக்க நிழலில் லாத
நீள்வீதி தனில்காத்துக் கிடப்பாய் அந்தோ!

வாக்களித்தல் தலையாயக் கடனா னாலும்
வாகான வேட்பாளர் தம்மைத் தேர்ந்தே
நோக்கறிந்து வாய்பளித்தல் வேண்டும், இன்றேல்
நோயுயிரி போன்றவரால் நலக்கே டுற்றே
ஆக்கமொன்றும் காணாமல் ஐந்தாண் டிங்கே
ஆணவமும் ஊழலுந்தாம் ஆளும் நம்மை!
தூக்கிவிட்ட வேட்பாளர் தொகுதி மக்கள்
துயர்கேட்க வரமாட்டார், தொகைதான் சேர்ப்பார்!

# இனப்பெ யரென்ன?

அடிமைகளில் சிறந்தவனென் றந்த நாளில்
　ஆங்கிலேயன் சான்றளித்தான் உனக்கு, நீயோ
அடிமனத்துள் நீதிதனைப் புதைத்து விட்டே
　ஆலயத்தைக் கட்டுகிறாய், உழைத்துச் சேர்த்த
மடிப்பணத்தை வழிப்பறிக்குக் கொடுத்து விட்டு
　மனத்துயருக் காறுதலாய் விதியைச் சொல்வாய்!
படிப்புக்கும் வாழ்க்கைக்கும் பால மின்றிப்
　பாதரச மானவனே, திருந்திக் காட்டு!

பாலைப்போல் பொங்கிடுவாய், பழிபா வத்தில்
　பங்குனக்கும் உண்டென்றால் பதுங்கப் பார்ப்பாய்!
நூலைப்போல் உள்ளடக்கம் நூறா னாலும்
　நுழைகின்ற கெடுநினைப்பைத் தடுக்க மாட்டாய்!
வாலைப்போல் வாழ்பவனே! முந்தும் எண்ணம்
　வரும்போகும், வழுக்கிவிழும் வரலா லின்றி
ஓலைக்கே ஊறிழைக்கும் செல்லைப் போலே
　உனைமாற்றிக் கொள்ளாதே உறக்கம் நீக்கு!

இனநலனை மொழிநலனைக் காப்போ மென்னும்
　இயல்பற்ற தனிப்பிறவி நீதான், நாளும்
மனநலனை மதிநலனை மக்கச் செய்யும்
　மடைமாற்றா நீரோட்ட மாவாய், என்றும்
தனநலனைப் பெருக்குதற்கே கற்பா யன்றித்
　தாய்மொழியைக் கற்பதற்கு முனைய மாட்டாய்
இனநலனை மாற்றார்க்கே விற்று மாற்றாய்
　ஏதேனும் பதவிபெற எண்ணி டாதே!

போற்றாத பொறாமைக்கிங் காட்பட் டோரின்
புகழ்மீது புல்முளைக்கும்; முளைத்த திங்கே!
வேற்றாரைத் துதிப்பதிலே வெறியைக் காட்டி
வீழ்ச்சியிலே கொடிகட்டிப் பறப்பாய், நெஞ்சில்
ஊற்றாகப் பெருக்கெடுக்கும் பரிவு, மாற்றான்
உயர்வுக்கே படிக்கல்லா யாகும், நச்சுக்
காற்றாகிப் போனவனே! இன்றும் மீளக்
கற்காத பாமரனே! இனப்பே றென்ன?

கோவிலுக்கே என்றால்தான் கொடுப்பாய், ஏய்க்கும்
குறுமனத்தர் சடைமுடியில் மயங்கிப் போவாய்!
காவிகளின் கால்கழுவிக் குடிப்பாய், மற்றும்
கரைவேட்டித் துண்டுகளின் கையா ளாவாய்!
நாவிளிப்போர் தமைநம்பிக் கெட்டுப் போவாய்
நாகரிகம் தனையுடையில் மட்டும் காப்பாய்!
மாவிரித்த நிழலையும்நீ சுருட்டப் பார்ப்பாய்
மாண்பிலா நெறிசென்று மாள வேண்டாம்!

உன்முன்னோர் வாழ்வுதனை எண்ணிப் பார்த்தால்
உன்னிலையை எண்ணியுளங் குன்றிப் போவாய்!
தொன்மரபில் வந்தவனே! துணிவைக் கொன்று
தொடைநடுங்கி ஒன்னலர்பால் ஒட்ட லாமா?
நன்மரபாம் உன்மரபு, நானி லத்தார்
நயந்ததடா வியந்ததடா நாலுங் கெட்டு
வன்கணர்பால் சார்ந்துயர எண்ணி டாதே
வரலாற்றைக் கறைப்படுத்த ஒப்பி டாதே!



# மனித விலங்குகள்

அடவியில் வாழு கின்ற
அரிமுதல் நரியீ றாகக்
குடர்ப்பசிக் காகக் கூட
குலவுயிர்க் கொள்வ தில்லை!
கெடநினைக் கின்ற தீயர்
கிளர்ந்துமே மாந்த நேயம்
படவுயிர்க் கொலைபு ரிந்தே
பகுத்தறி வற்றோ ரானார்!

அல்ஜியர்ஸ் நாட்டில் தீயர்
அச்சமும் நாணு மின்றிக்
கொல்பகை வளர்த்துக் கொண்டு
கொலைக்கலை வளர்க்கின் றார்கள்!
நல்லியல் பாலை நெஞ்சர்
நற்றுணை யானோர் தம்மைப்
புல்லென எண்ணிக் கொல்லும்
போக்கினால் விலங்கா யானார்!

உயிரிடம் அன்பு காட்ட
ஓதிய சான்றோர் கூற்றைப்
பயின்றிடச் செய்துங் கூடப்
பயனிலை, பீகார் மண்ணில்
துயின்றவர் தம்மைக் கொன்று
துயர்வினை செய்தார், பண்ணைக்
கயவரின் கூலிக் குண்டர்
கரங்களில் கறையாய் ரத்தம்!

மதத்தினால் கொலைபு ரிந்தோர்
மதத்தையே கொலைசெய் தார்கள்!
இதந்தரா விளைக ளாற்ற
எம்மதம் பணித்த திங்கே?
புதர்மனம் மதத்தின் பேரால்
புரிந்திடுங் கொடுமை கட்கு
மதமொரு திரையே! சாதி
மற்றுமோர் மறைப்பு மாகும்!

நெஞ்சிலே ஈரம் இல்லார்
நேரடித் தொடர்பற் றோரை
வஞ்சமாய்க் கொல்லும் போக்கு
வளர்முகம் காணல் நன்றா?
பிஞ்சுடன் மலரைக் கொய்தால்
பின்னுணரக் கனியுண் டாமா?
விஞ்சிடும் பகையை விட்டால்
விளையுமே மாந்த நேயம்!

இறப்பினை வென்றா ரில்லை
இரக்கமே அறத்தின் எல்லை!
அறப்பணி செய்தார்க் கென்றும்
அழிவிலை அவல மில்லை
புறத்தினைத் தூய்மை செய்வோர்
புண்ணெனும் இதயந் தாங்கி
மறத்தினைப் போற்றா ராகி
மாந்தராய் மாற வேண்டும்!

## பெண்



# பெண்ணே..!

நிலவாக நீயிருந்த காலம் போதும்;
நிழலாகிக் கண்டநலன் நீண்டால் ஓதும்!
நிலமாக நீயிருக்க நெஞ்சுள் பூட்டு
நிலையாச்சே அதைத்தகர்க்கக் காண்பாய் கூட்டு!
அலரென்ற பொல்லாங்குன் ஆடை யாச்சே;
அடக்கமென முடக்குவதோ அறிவை? சேச்சே!
குலமென்றும், மதமென்றும் குறுக்குச் சந்தில்
குடியிருப்பு இனியெதற்கு? கோட்டை நோக்கு!

ஆயகலைகள் அனைத்திற்கும் நீதான் ஊற்று!
அடிமனத்துள் பயமெதற்கோ? அதனை மாற்று!
தாயகமே! தன்னிரக்கம் அதுவுன் கூற்று;
தகுதியிடம் தானென்ற எண்ணம் ஏற்று
பாயகலம் பெண்ணுலகம் என்றால் எற்று
பலதுறையில் பங்குபெற உரிமை சாற்று!
தூயமனம் தொண்டுமனம் தன்னைப் போற்று;
துலங்கட்டும் நம்பிக்கை என்னும் கீற்று!

ஏழையென வாழ்ந்தாலும் இமயம் பெண்மை!
இளப்பமென எண்ணாதே! எரிதீ நாக்கு
வாழையதன் பூப்போலே தாழ்வ துண்டா?
வாழ்க்கையிலும், வளர்ச்சியிலும் உதவி நல்கித்
தாழைமடல் பண்பொத்த தகுதி பெற்ற
தகையணங்கே! தலைநிமிர்க! தாக்க வந்தால்
கோழையெனக் குனியாதே, கொலைவாள் தூக்கு;
குமுகாயம் உனைமதிக்கும், அச்சம் போக்கு!



# பெண்படும் பாடு

காலையில் எழுதல் பெண்கள்
கடமையின் எடுப்பு, மாந்த
ஆலையாய்ச் சுழன்றே வேலை
அனைத்தையும் முடிக்க, ஈரம்
சேலையை நனைக்க ஓடிச்
செல்வழி உந்தைப் பற்றி
ஓலையாம் சுவடிக் கட்டாய்
உரசலில் பயணம் செல்வார்!

அதுஇது என்று கேட்டே
அடம்பிடித் தழுத பிள்ளை
முதுகினில் அடித்த காட்சி
முன்வரக் கலங்கும் கண்கள்;
முதுமையைச் சுமக்கும் பெற்றோர்
முனகலும் காதில் ஓதும்
பதுமையாய் இயங்கி னாலும்
பலசுழல் நெஞ்சுக் குள்ளே!

மேடையில் போட்ட மாலை
மேலவ ரானா ராண்கள்.
பாடையைச் சேர்ந்த பூவாய்ப்
பாவைய ரானா ரந்தோ!
ஆடையில், அணியில், ஆளன்
ஆண்டிடும் போது மட்டில்
தாடையில் மச்ச மாவோம்
தவறிவண் பெண்பி றப்பே!

தாமதம் வண்டி என்றால்
தவித்தியாம் சிறுத்துப் போவோம்
காமனாய் மாறும் ஆண்கள்
கண்களில் வெந்து சாவோம்
தூமமாய் அலர்செய் வாரும்
தொழிலக முள்ள தாலே
பூமனப் பெண்கட் கிங்கே
பொதுவிடம் எலாம்முட் காடே!

தூமம் = புகை

உடலதோ உந்துக் குள்ளே
உள்ளமோ வீட்டுள், ஆங்கே
கடலெனப் பணிகள், பிள்ளைக்
கல்வியின் குறைகள், நோயில்
இடர்ப்படும் பெற்றோர் எண்ணம்
இடம்பெறும் மறதி யாவும்
தொடர்நிலைச் செய்யு ளாகித்
துணைவரும், இவர்தாம் பெண்கள்!

செய்பணி யதிலே பெண்கள்
சிறுபிழை செய்தா ரானால்
நெய்தனைக் கொட்டி னாற்போல்
நீட்டுவார் மேலாள்; கொஞ்சும்
பொய்ச்சிரிப் புதிர்த்தால் போதும்
போய்விடும், சினத்தின் மாற்றாய்
நொய்யெனக் குழைவார், வெட்கம்
நோயென வாட்டும் நெஞ்சை!

அந்தியே அலுவல் பெண்ணை
அலமுறச் செய்யுங் காலம்!
எந்திர வாழ்வில் பிள்ளை
ஏங்கியே காத்தி ருக்க
எந்துகள் ஊரும் கோலம்
ஊசியாய்த் தைக்கும், அந்தோ
தந்தமே இழந்த வேழத்
தவிப்புடன் இல்லம் சேர்வோம்!

உடைமையாய்ப் பெண்ணை எண்ணி
உரிமையாய்ப் பெற்ற ஆண்கள்
எடையிலே முள்ளைப் பார்க்கும்
இயல்பிலே துணையைப் பார்ப்பர்!
உடையிலோ பசுமை, பெண்ணின்
உள்ளழல் உணரார், வீட்டுள்
அடைபடாப் பெண்கள் பாடு
அலைபடும் பாடாம் என்னே!

# பெண்ணுக்கோர் நீதி

ஆட்சி யதிகாரம் ஆனபல ஏந்தெல்லாம்
மாட்சியுறச் செய்மனையாள் மாண்பிற் கிணையாமோ?
காட்சி விருந்துவில் காண்டீப மாகிடுமா
மீட்சிக்குப் பெண்துணையே மேல்.

## எல்லாமே பெண்

என்னயிருந் தென்னபயன்? இல்லாள் நலமின்றேல்
தென்னையிலாத் தோட்டம்போல் தேசின்றிப் போம்வாழ்க்கை
பன்னலமும் ஆண்களுக்குப் பாவையரால் வந்தெய்தும்
என்ப துணர்த லினிது.

## இருநீதி

பற்றாக் குறையாண்பால் பன்மடங்கே யானாலும்
பொற்றொடியார் மட்டில் பொருட்படுத்தக் கூடாதாம்?
வெற்றுப் புணர்ச்சியிலே வெந்து கிடத்தல்பெண்
பெற்றியின் வித்தென்பார் பித்து.

## இதுவொரு நீதி

குந்தும் குடிசையிலே கொஞ்சம் இடமிருந்தால்
வெந்த பருக்கைக்கு வீட்டில் வழியிருந்தால்
இந்திரனாய் எண்ணி இரண்டாம் மனைதேடல்
புந்தி புழுத்தோரின் போக்கு.

## பொது நீதி

பொல்லா மனுநீதி போக்கில் இருநீதி
வல்லார் வகுத்த வழுவதனை நேராக்கி
எல்லாம் இணையென்றார் ஈரோட்டார், ஏற்பதுதான்
ஒல்லும் நெறியென்றே ஒப்பு.

நெடுங்கதை

# புதர்வேலி இயக்கம்

1. உலகிதை வெய்யோன் சொந்த
ஒளியினால் ஆளக் கண்டு
நிலமிதை முற்றும் ஆள
நினைத்தனர் ஆங்கி லேயர்
புலமிலார் வணிக வாய்ப்பைப்
புவியெலாம் தேடிச் சென்று
பலமிலார் தம்மை வென்று
பறித்ததே வரலா றிங்கே!

2. வானவில் வளைவுக் குள்ளே
வண்டியை ஓட்டப் பார்த்தே
ஊனமாய்ப் போன ஆட்கள்
உண்டிவன், உரத்துப் பேசும்
மானமாய் அழுக்கா றாசை
மண்டிடப் பொருதோர்க் கெல்லாம்
ஆனதைச் செய்வார் போலே
ஆட்சியைப் பறித்துக் கொண்டார்!

3. நெற்றியில் நீறுண் டானால்
நிலையுழைப் பிலையென் றாகும்
வெற்றியே இலக்கென் றானால்
வீழ்வதங் கறமாய்ப் போகும்
பற்றுடன் தீர்ப்புச் சொன்னால்
பழுதினால் நீதி சாகும்
கற்றவர் அருகிப் போனால்
கலைநிலம் கறம்பாய்ப் போகும்

4. ஆனதிங் கிவையெல் லாமே
ஆங்கிலர் அடியைத் தாங்கப்
போனதிங் குரிமை வாழ்வு
பொறுப்பிலார் பொருளைப் போலே!
ஊனது பட்ட தென்றால்
உயிர்க்கவண் இருப்புண் டாமோ?
வானது பொய்த்த காட்சி
வளர்ந்தது நாட்டி லன்றே!

5. ஆசியா ஆப்பி ரிக்கா
ஆங்கில ஆட்டின் காடு!
பாசியாய் மனத்தை மாற்றிப்
பாமர ராக வாழ்ந்தோர்
வீசிய வலையில் வீழ்ந்த
வெண்புறா வானார், மக்கள்
தேசிய உணர்வின் மீது
தேம்சுநீர் வெள்ளக் காடே!

6. வண்டியில் பொய்யை ஏற்றி
வக்கணைப் பேசி விற்றோர்
அண்டைநா டயர்லாந் தையும்
ஆங்கில மாளும் என்றார்!
தொண்டையில் சிக்கிக் கொண்ட
துண்டெலும் பன்ன ஐரிஷ்
எண்டிசை வியக்கத் தேம்சை
எதிர்த்தது நீண்ட காலம்.

7. தாய்மொழிப் பற்றி ருந்தால்
தலைமுறை விழித்துக் கொள்ளும்!
தூய்மையாய் இனமி ருந்தால்
துடித்தெழும் போராட் டங்கள்!
காய்தனைக் கொய்து விட்டால்
கனிமணம் தோப்பில் ஏது?
தாய்மொழி மறந்து போனால்
தனியின உணர்வங் கேது?

8. படையினால் பெற்ற வெற்றி
பயன்தர வேண்டு மாயின்
தடையினால் ஐரிஷ் வாழ்ந்த
தடமழித் தொழிக்க வேண்டும்,
அடையலாம் நன்மை முற்றும்
ஆங்கிலம் கற்றா லென்றே
கடையரும் நம்பும் வண்ணம்
கல்வியை மாற்ற வேண்டும்.

9. என்றெலாம் எண்ணிப் பார்த்தே
இனஅடை யாளங் காட்டும்
நன்மொழி ஐரிஷ் கல்வி
நடைமுறை மாற்றி விட்டு
வன்கணர் ஆங்கி லத்தை
வழக்கிலே நுழைத்தார், ஏற்கா
தென்மொழி என்றால் குற்றம்
இருட்சிறை தண்ட மென்றார்.

10. அயர்லாந் தடிமை யாச்சு
அங்கவர் நலன்கள் போச்சு!
வியர்வையும் வற்றிப் போச்சு
விடியலு மிலையென் றாச்சு
நயமிலா ஆங்கி லேயர்
நசுக்கினர் மொழியை, அஞ்சித்
தயங்கினர் மக்கள், தங்கள்
தாய்மொழி கற்க அந்தோ!

11. அயர்லாந் தெல்லைக் குள்ளே
அன்னையின் மொழியில் கல்வி
இயலிசைக் கதைகள், பாடல்
இவையெலாம் கற்பித் தற்கே
முயன்றதாய்த் தெரிந்தால் போதும்
முதற்பகை யாக எண்ணித்
துயர்படத் தூக்கோ, நாட்டைத்
துறத்தலோ கசையோ உண்டாம்!

12. எத்தனை கொடிய சட்டம்
இயற்றியே தடுத்த போதும்
செத்ததா ஐரிஷ்? செக்கர்
சினக்கதி ரழிந்த துண்டா?
கத்தியின் முனையில் நின்றும்
கலங்கிடா மொழிப்பற் றாளர்
செத்ததாய்க் கணக்கே யன்றிச்
சிந்தையுள் வாழ்கின் றார்கள்!

13. கண்ணிகர் மொழி,பண் பாட்டைக்
காத்திட உறுதி பூண்டோர்
மண்ணகத் துள்ளே நாளும்
மறவராய் வாழ்ந்துள் ளார்கள்!
கண்ணியில் வீழா மானும்
காட்டிலே உண்டென் றாற்போல்
திண்ணியர் மறைந்து றைந்தே
தீமையை எதிர்கொண் டார்கள்.

14. உளவறிந் தோது தற்கே
ஊருளே ஆளி ருந்தும்
அளவிலா மொழியார் வத்தால்
அடுத்தவர் அறியா வண்ணம்
களமெனப் புதருள் தங்கிக்
கல்வியைப் புகட்டிட் டார்கள்
தளர்ந்தவர் விட்டி ருந்தால்
தாய்மொழி மறைந்தி ருக்கும்.

15. தடைபல வந்த போதும்
தாய்மொழி காப்ப தற்கே
படைபலம் இல்லாத் தொண்டர்
பதுங்கியே பணிசெய் தார்கள்!
அடையலாம் பதவி என்றே
அயலவர் அடிசார்ந் தோரை
இடைவழி இருந்து பார்த்தே
எச்சரித் திட்டார் மக்கள்!

16. புதர்வேலி இயக்கத் தாரோ
பொருளினைத் திரட்ட வில்லை
உதவினோம் மொழிக்கென் றோதி
உரிமைகள் கோர வில்லை
மதர்ப்புடன் வாழு தற்கே
மற்றதைத் தேட வில்லை
எதற்குமே ஆசை யற்றோர்
இயற்றினர் மொழித்தொண் டாங்கே!

17. உண்டனர் ஏழை போலே
உறங்கினர் படப்புக் குள்ளே
பண்டிகை ஆடை வேண்டார்
பழந்துணி போது மென்றார்
தண்டியே தொகைசேர்க் காது
'தம்பிடி' போது மென்றார்
உண்டிவண் என்றே சுட்ட
ஒருவரைத் தேட வேண்டும்.

படப்பு= வைக்கோல் போர்

18. சேரியில், சிற்றூர் தன்னில்
செய்தனர் மொழித்தொண் டாங்கே!
நேரியர் பணியால் தானே
நிலைத்தது கெய்லிக் காங்கே!
பூரியர் சட்டம் திட்டம்
போனது பழுதாய், வைக்கோல்
போரிடை மறைந்து கற்றே
புரந்தனர் மொழியை என்னே!

19. வறியவர் வாழி டத்தில்
வளர்த்தனர் மொழியு ணர்வை
குறியெலாம் ஒன்றாய்க் கொண்டே
கொழுமொழிப் பண்பைக் காத்தார்
நெறியினர் கதைசொன் னார்கள்
நெருங்கியே மக்கள் கேட்டார்
செறிவுடை பாடல் மூலம்
சிந்தையைக் கிளறித் தொட்டார்.

20. பெரியவர், சிறுவர் கேட்டார்
பிள்ளையும் தாயும் கேட்டார்
உரிமைகொள் மொழியின் சீர்மை
உயர்ந்ததம் கெய்லிக் தொன்மை
வரிசையைக் கேட்டுக் கேட்டே
வளர்த்தனர் பற்றைப் பண்பை
விரித்தபொய் வலையை எந்தி
வெண்புறா பறந்த தாங்கே!

21. புலன்களைச் சிலிர்க்கச் செய்யும்
பொருட்குவை பரிசே நோபல்!
உலகெலாம் மதிக்கு மந்த
உயர்தரப் பரிசை ஐரிஷ்
நிலத்தினர் மூவர் பெற்றே
நிமிர்த்தினர் மொழியின் மாண்பை
நலம்பெற மொழியைக் காத்த
நயன்மையின் வெற்றி ஈதே!

22. வில்லியம் பட்ளர் யாட்சும்
விரிபுகழ் பெர்னார்ட் ஷாவும்
செல்வமே கல்வி என்ற
சாமுவெல் பக்கட் தானும்
முல்லையாய் மணக்கும் மூவர்
முதல்நிலை பரிசைப் பெற்ற
நெல்மணி அங்கே கண்டோம்
நிலமிதில் என்று காண்போம்?.

23. அயர்லாந் தாரைப் போன்றே
அரிமா ஆனோ மானால்
வியந்திடும். விளைவு மீண்டு
விடியலாய்த் தோன்றும், ஆனால்
முயல்பவர் போல்ந டித்தே
முடிச்சிலே குறிவைக் காத
நயந்திடும் மொழிப்பற் றாளர்
நம்மிடை தோன்ற வேண்டும்.

24. புதர்வேலி இயக்கத் தார்போல்
புரையிலாத் தொண்டர் வேண்டும்
இதமாகப் பொருளைத் தண்டி
ஏய்ப்பவர் அருக வேண்டும்
மதமாகத் தமிழை மாற்றும்
மயக்கினர் மாற வேண்டும்
எதனாலும் மாற்றக் கூடா
இயல்பினர் தொடர்பே வேண்டும்.

25. தமிழறிந் தோரெல் லாமே
தனியின மாகி விட்டார்
தமிழிலே புலமை பெற்றோர்
தாவினர் பல்லக் குள்ளே
தமிழ்நலங் காத்தற் கென்றே
தண்டினர் பொருளும், சில்லோர்
தமிழ்மடத் தலைவ ராகித்
தாங்குக பல்லக் கென்றார்.

26. இவர்தமிழ்த் தொண்டின் எல்லை
இதழியல், மேடைப் பேச்சு
இவர்தமிழ்ச் சுற்ற மென்ப
திவர்களைப் புகழுங் கூட்டம்
இவர்களின் பார்வை வீச்சு
எளியரைத் தொடுவ தில்லை
இவர்களே தமிழ்க்காப் பாளர்
எனில்தமிழ் வளர்வ தெங்கே?

27. வெற்றுரை விளைச்ச லிங்கே
வேண்டிய அளவு கண்டோம்
பற்றுடை இளையோர் தம்மைப்
பதரென நினைப்பார் கண்டோம்!
கொற்றவர் குடிபோ லெண்ணும்
கொள்கையர் கோட்டம் கண்டோம்
தெற்றென மேலாண் மையைத்
தேடுவார் குறியைக் கண்டோம்.

28. அவரவர் அறிந்தார் தம்மை
அறிஞராய் ஏற்றி நின்றோம்
எவர்திறம் தேடி ஆய்ந்திங்
கேற்றினோம்? எதிர்பார்ப் பாலே
திவலையை ஆழி யாக்கித்
தினவினைச் சொரிந்து விட்டோம்
உவர்நில மாக்கு தற்கே
உப்புநீர் பாய்ச்சி விட்டோம்.

29. சுவடியைத் தேடித் தேடிச்
சுற்றினார் சாமி நாதர்
அவரருந் தொண்டால் ஆய்ந்த
அற்றைநாள் நூல்கள் பெற்றோம்
எவரவர் இயல்பைப் பெற்றே
இன்றிவண் உழைக்கின் றார்கள்?
சுவர்விளம் பரத்தைத் தேடிச்
சோர்வதும் தமிழ்த்தொண் டாமோ?

30. சேற்றிலே காலூன் றாமல்
செந்நெலின் நடவு ஆமா?
ஆற்றுநீர் ஆள்பாய்ச் சாமல்
அருவியா மடைதி றக்கும்?
ஏற்றமே மொழிக்குண் டாக்க
எளியரைத் தேற்ற வேண்டும்
ஊற்றென உணர்வைத் தூண்டும்
உழைப்பினை நல்க வேண்டும்!